**விற்பனையாளர்கள் தேவை**

தரகு வழங்கப்படும்

திருமலை மாவட்டத்தில் மலைமுரசு பத்திரிகையை விநியோகிப்பதற்கு பகுதிநேர, முழுநேர விற்பனையாளர்கள் தேவை.

தொடர்பு: 159A, 2வது மாடி,
கடல்முக வீதி,
திருகோணமலை
0754252042

வைகாசி மாதம் 11ம் திகதி

May 25, 2013

# மலைமுரசு®

அறைவு 01 இயம் 44

MALAIMURASU

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்

வார இதழ்

விலை – 20.00 Registered as a Newspaper in Sri Lanka பக்கங்கள் – 10 பிரதி சனி தோறும் திருமலையில் இருந்து வெளியாகும் பத்திரிகை

# 3 வருடங்களிற்கு பின் அவுஸ்திரேலியாவில்!

(ஸ்ரீ)



சுமார் மூன்று வருடங்களுக்கு முன் அவுஸ்திரேலியாவிற்கு படகுப் பயணத்தை மேற்கொள்ளும் நோக்குடன் மற்றோர் அயல் நாட்டிற்குப் பயணித்து அங்கிருந்து படகேறிய பின்னர் தற்போது வரை தொடர்புகள் ஏதுமற்றுப் போயிருந்தவர்களா கடந்த மாதம் அவுஸ்திரேலியாவின் "பேர்த்" நகரை வந்தடைந்துள்ளனர்? என்னும் சந்தேகம் எழுந்துள்ளது.

இணையத்தளமொன்றில் வெளியான செய்தியுடன் கூடிய.. 7

## கிழக்கின் தமிழ்த்தினப் போட்டியை தமிழ் விழாவாக நடாத்தியது சேனையூர் மத்திய கல்லூரி

(ஸ்ரீ)

இவ்வருடம் கிழக்கு மாகாண தமிழ்மொழித்தின விழாவை நடாத்தும் பொறுப்பைப் பெற்றுக் கொண்டிருந்த சேனையூர் மத்திய கல்லூரி அவ் விழாவை ஒரு பெரும் தமிழ் விழாவாக நடாத்திக்காட்டி தமிழ்க் கலாசார உயிர்ப்பை உறுதிசெய்திருந்தது.

அரங்கமைப்பு, ஒழுங்கமைப்பு, 7



## மாகாணதமிழ்த்தின விழாவில் நான்கு முதலிடங்கள்

(ஸ்ரீ)

**2** இந்துக் கல்லூரி
சண்முகா மகளிர் கல்லூரி

நடந்து முடிந்த மாகாணத் தமிழ்த்தின விழாவில் நான்கு முதலிடங்களைத் தட்டிச் சென்றுள்ளது திருமலை மாவட்டம்.

கடந்த 19ம் திகதி நடைபெற்ற தமிழ்மொழித்தின விழாவின் போது கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களும் தம்மிடையே போட்டியிட்டுக்கொண்டன. அப்போட்டிகள் தனித்தனிப் பிரிவுகளாக 1 முதல் 5 வரை பிரிக்கப்பட்டு நடாத்தப்பட்டன. 7

## பொது வைத்தியசாலையில் புளோரன்ஸ் நைட்டிங்கேள்

(கீத்)



7


# – கிழக்கு மாகாண சபையில் அமளிதுமளி –

(கீத்)



### ஆலோசிக்காமல் ஒத்திவைத்தது பொறுப்பற்ற செயல் – எதிர்க்கட்சித் தலைவர்

கிழக்கு மாகாண சபையின் மாதாந்த அமர்வுகள் வழமை போல மே மாதம் 21ம் திகதி கூடிய போது அம்பாறை மாவட்ட எதிர்க்கட்சி உறுப்பினரால் முன்வைக்கப்பட்ட வாய்மொழி மூல விடயமொன்றால் ஏற்பட்ட தர்க்கத்தால் சபை எவ்வித முன்னறிவிப்புமின்றி ஒத்திவைக்கப்பட்டது.



### மாகாண சபை அதிகாரத்தின் படியே சபை ஒத்திவைக்கப்பட்டது

மாகாண சபை தவிசாளர்



அம்பாறையில் நடைபெற்ற "தேசத்திற்கு மகுடம்" கண்காட்சிக்குச் செலவிடப்பட்ட பல மில்லியன் ரூபாய் பணம் ஓர் தேவையற்ற செலவென அம்பாறை மாவட்ட மாகாண சபை உறுப்பினர் தமது வாய்மொழிமூல பிரேரணை ஒன்றைச் சமர்ப்பிக்க முற்பட்டபோது அதனை எதிர்த்து.. 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
159A, 2ஆம் மாடி, கடல் முக வீதி,
திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042

# ஈழத் தமிழர் பிரச்சனைக்கான அரசியல் தீர்வு வரைபை தயாரிக்கும் முயற்சிகள் இணக்கப்பாடின்றி முடிந்தது

ஈழத் தமிழர்களுக்கான அரசியல் தீர்வுக்கான மாதிரி வரைபு ஒன்றை தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்சிகளிலிருந்து தேர்வு செய்யப்பட்ட அங்கத்தவர்களிடையே இணக்கமின்மை முற்றியதால் இவ்வரைபு முயற்சி தற்காலிகமாக கைவிடப்பட்டதாக கொழும்பின் ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. இம் முன்வரைபை தயாரிக்கும் முயற்சியில் இறங்கி இருந்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சட்டத்துறை விரிவுரையாளர் குமரகுருபரன் மற்றும் சிரேட்ட சட்டத்தரணி புவீந்திரன் ஆகியோர் குழுவாக செயற்பட தொடங்கியிருந்தனர். ஆயினும் இக்குழுவின் முதல் சந்திப்பில் கலந்துரையாடலுக்கு முன்னரே கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தினால் முன்வைக்கப்பட்ட நிபந்தனை ஒன்றால் அங்கத்தவர்களால் இணக்கமொன்றைக் காணமுடியாது போய்விட்டதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார். திரு. எம்.ஏ. சுமந்திரனினால் பரிந்துரைக்கப்பட்ட சில முன்மொழிவுகளை ஆரம்பகட்டத்தில் இக்குழு ஏற்றுக்கொண்டிருந்தது எனினும் "எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் த.தே.கூ தனது பெயரில் போட்டியிடாமல் பினாமி ஒன்றின் பெயரில் போட்டியிட வேண்டும்'' என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நிபந்தனை ஒன்றை கூறியிருந்தார். இந்நிபந்தனையில் அரசியல் தீர்வு முன்வரைபை உருவாக்குவதற்கு எந்தத் தர்க்க ரீதியான தொடர்பும் இல்லாதிருந்ததால் அதனைத் தான் மறுதலித்து விட்டதாக சுமந்திரன் மேலும் தெரிவித்தார். தமிழர்களை இடை நடுவில் விட்டுவிட்டு தமிழர் பிரச்சனை ஒன்றுக்குத் தீர்வொன்றை காணாமல் த.தே.கூ ஓயாது எனத் தெரிவித்த அவர் இவை தொடர்பாக மேலதிக கலந்துரையாடல்களை தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஜுன் மாதம் 8ந் திகதி வவுனியாவில் நிகழ்த்தவுள்ளது எனத் தெிவித்தார்.

## வணக்கம்

### மொழியும் இருப்பும்!!!

ஒரு இனத்தின் சுயநிர்ணயத்தைத் தீர்மானிப்பதற்கு ஆறு அடிப்படையான விடயங்கள் தேவை என தமிழ்நாட்டில் நடைபெற்ற கூட்டமொன்றில் பழ. நெடுமாறன் அவர்கள் தெரிவித்திருந்தார். அவற்றுள் மொழியும் ஒன்று.

தமிழ்மொழியை நாம் சிவனுடன் ஒப்பிட முடியும். சிவராத்திரியன்று சிவனின் அடியையும் முடியையும் தேடியதாகப் புனைவுகள் இருக்கின்றன. அவ்வாறே தமிழ் மொழியும் அதன் ஆதியும் அந்தமும் இல்லாத மொழி.

எம் தாய்த் தமிழ்மொழியின் தனித்துவத்தைப் பேணிப் பாதுகாப்பதன் ஊடாக நாம் எமது இருப்பையே பேணுகின்றோம் என்பதை ஈழத்தமிழர் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

ஈழத்தின் பூர்வீகக் குடிகள் தமிழர் இல்லை என்பதை நிலைநாட்டுவதற்காகப் பேரினவாதம் எடுத்துவரும் பல முயற்சிகளில் தனித்துவம் மிக்க தமிழ் மொழியை இன்னுமொரு நாட்டின் புழக்கத்திலுள்ள மொழியுடன் மருவச் செய்து நாம் அந்நாட்டிலிருந்த வந்தேறிய குடிகளே என நிரூபிக்கும் முயற்சிகளை அப் பேரினவாதம் மேற்கொண்டு வருகின்றது. அதாவது இந்தியத் தமிழ் மொழியைத் தனத்துவம் மிக்க எம் தமிழ் மொழியுடன் மருவ விட்டால் அடுத்த தலைமுறை பேசும் தமிழ் மொழியின் ஓசை எப் பூர்வீகத்தைக் கொண்டிருக்கும்?

அதற்குக் கால்கோலமைக்கும் செயற்பாடுகளில் ஒன்றே வடத் தொலைக்காட்சியின் அறிமுகம். அதேபோல தமிழ் வானொலிச் சேவைகளின் ஒலிபரப்புக்கள்.

இவற்றின் தாக்கமொன்றை கடந்த க.பொ.த சாதாரண தரப் பரீட்சையின் தமிழ்ப் பாடப் பெறுபேறுகள் வெளிக்காட்டியுள்ளன. இப்போது கணித பாடத்தை விடத் தேர்ச்சி மட்டம் குறைந்த பாடமாக தமிழ் காணப்படுகின்றது.

தமிழ் மொழியைச் சரியாகக் கற்றுப் பேசுதல் என்பதும் அதனை இலக்கண, இலக்கிய சுத்தியுடன் எழுதுவதென்பதையும் மற்றைய மொழிகளுக்கு எதிரான செயற்பாடெனத் தப்பார்ப்பிதம் செய்தல் வேண்டாம்.

எமது மொழி எமது இருப்பை உறுதி செய்யும் ஆணிவேர்களில் ஒன்று. ஏனைய சக்திகளால் அதை மாற்றவோ அழிக்கவோ முடியாது. எமது வரலாற்றை யாரும் திரிபு படுத்தலாம். கந்தளாய் குளத்தினைக் கட்டியதாக அக்ரபோதி பெயரிடப்படலாம். ஆனால் தமிழ் மொழியை நாமாக மருவும் வரை யாராலும் மருவிவிட முடியாது.

விடுதலைப் போரென்பது வெறும் ஆயுதத்தை நம்பி மட்டுமல்ல என்ற நெல்சன் மண்டேலாவின் கூற்றை இங்கு மீட்டுகின்றேன்.

எமது இருப்பைத் தக்க வைத்துக்கொள்வது எவ்வாறு எனச் சிந்திக்கும் நாம் ஏன் எமது மொழியை மருவாமல் காக்கக் கூடாது? அதனை மனதிருத்தினால் யாரும் போராளி தான்.

# மாகாண அபிவிருத்திக்கான மத்திய அரசின் நிதி அதிகரிப்பு

## – கிழக்கின் முதலமைச்சர் –

கிழக்கு மாகாண உட்கட்டமைப்பு மற்றும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக மத்திய அரசாங்கத்தினால் இவ்வருடம் கூடுதலான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ. மஜீத் தெரிவித்தார்.

திருகோணமலை வரோதைய நகரில் அமைந்துள்ள கிழக்கு மாகாண பிரதம செயலாளர் பணிமனையில் மாகாண அபிவிருத்தி முன்னேற்றம் தொடர்பான விசேட கூட்டத்தில் தலைமை தாங்கி உரையாற்றும்போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

## இராணுவ சமையற்காரனின் பாலியல் கைவண்ணம்

யாழ்ப்பாணம் - திருமலை பேரூந்தில் இளம் பெண்ணின் விருப்பத்துக்கு மாறாக பாலியல் சேட்டை புரிந்த ஒருவன் பயணிகளால் நையப்புடைக்கப்பட்டு காவல்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளான்.

யாழ்ப்பாணத்திலிருந்து இரவு 10 மணிக்குப் புறப்பட்ட பேரூந்தில் பயணித்த 20 வயதான இளம் பெண்ணுக்கே குறித்த நபர் பாலியல் சேட்டைகளைப் புரிந்துள்ளார். தனியே பயணித்த இப் பெண் தனி இருக்கையில் நிம்மதியான தூக்கத்தில் இருந்த வேளை அதிகாலை சுமார் 4 மணியளவில் மொரவெவ பகுதியிலிருந்து அப் பேரூந்துக்குள் ஏறிய இந் நபர் தூக்கத்திலிருந்த பெண்ணுடன் பாலியல் சேட்டைகளைத் தொடங்கியுள்ளார். திடுக்கிட்டு விழித்த அப் பெண் போட்ட கூச்சலை அடுத்து சக பயணிகளால் நையப்புடைக்கப்பட்ட நபர், காவல்துறையிடம கையளிககபபடடுளளார.

ஆரம்பக் கட்ட விசாரணைகளின் போது குறித்த நபர் இராணுவச் சமையற்காரர் என்று தெரியவந்தது.

## கஞ்சா லேகியம் கைப்பற்றினர் காவல்துறையினர்

கஞ்சா லேகிய விற்பனையில் கிண்ணியாவில் ஈடுபட்ட ஒருவரை சீனன்குடா காவல்துறை கைது செய்துள்ளது.

கைது செய்யப்பட்ட போது சுமார் 9 கிலோ நிறையுடைய கஞ்சா லேகியத்தை அவர் தன்னகத்தே வைத்திருந்துள்ளார்.

தனது தகப்பனாரின் வழியில் இவரும் இவ் வியாபாரத்தில் ஈடுபட்டுவருவதாகவும் தந்தையார் மும்முறை காவல்துறையால் கைது செய்யப்பட்டு வழக்குகளுக்கு முகங்கொடுத்து வருவதால் குடும்ப வியாபாரத்தை தனயன் ஆரம்பித்துள்ளதாகவும் இதற்காக லேகியத்தை மூதூரில் இருந்து கொண்டுவந்ததாகவும் ஆரம்பக்கட்ட விசாரணைகள் தெரிவிக்கின்றன.

மக்களிடமிருந்து கிடைத்த துப்பொன்றின் பேரில் விரைந்து செயற்பட்ட சீனன்குடா காவல்துறையின் குற்றத்தடுப்புப் பிரிவு உதவிக் காவல்துறைப் பரிசோதகர் ஜே.எஸ்.எம். ஜவ்சி தலைமையிலான காவல்துறையினர் இக் கைதை நிகழத்திருந்தனர்.

# ஆசியமுரசு

## வடகொரியாவிடம் சிக்கிய சீன மீன் கலம்

தனது மீன் கலத்தையும் அதன் ஓட்டிகளையும் விடுதலை செய்யுமாறு சீனா வடகொரியாவைக் கேட்டுள்ளது.

தனது படகை கடந்த 05ம் திகதி ஆயுதம் தரித்த வடகொரியர்கள் கடத்திச் சென்றுள்ளதாக படகின் உரிமையாளரான சீனர் வெளிப்படையாக தெரிவித்த பின்னரே இக் கடத்தல் வெளிச்சத்துக்கு வந்துள்ளது. இப் படகுடன் படகோட்டிகளும் கடத்தப்பட்டுள்ளனர்.

இவர்களை விடுவிப்பதற்கு சுமார் 64,000 ஐக்கிய இராச்சிய பவுண்களை பணயத் தொகையாக வடகொரிய கடத்தல் காரர்கள் கோரியுள்ளனர்.

## சீனாவின் பிரதான தானியமான அரிசியல் நஞ்சு

தென் சீன நகரங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்போது சீனாவின் பிரதான தானியமான அரிசியில் நச்சுப் பொருட்கள் கலந்திருப்பது தெரியவந்துள்ளது. கடந்த செவ்வாய் கிழமை வெளியிடப்பட்ட அறிக்கையின்படி ஹுனன் மாகாணத்திலுள்ள அரிசி ஆலைகளின் வியாபார நடவடிக்கைகளைத் தற்காலிகமாக நிறுத்தியுள்ள சீன அரசு விற்கப்பட்ட புதிய அரிசியினை ஏலுமான அளவிற்கு திரும்பப்பெற நடபவடிக்கை எடுக்குமாறும் அவ் ஆலைகளைக் கேட்டுள்ளது.

இப் புதிய அரிசியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவினை விட பல மடங்கு கூடுதலாக கட்மியம் எனும் இரசாயனப் பதார்த்தம் கலந்திருப்பது தெரியவந்துள்ளது.

## அணைத்தபடி உயிர்நீத்த தம்பதியர் – பங்களாதேஷ் கட்டடச் சரிவில் பரிதாபம்

பங்களாதேஷில் தொழிற்சாலை ஒன்று இடிந்து விழுந்த போது தொள்ளாயிரத்திற்கும் மேற்பட்ட ஆடைத் தொழிற்சாலைப் பணியாளர்கள் பலியாகியிருந்தனர்.

அக் கட்டட இடிபாடுகளை அவதானமாக அகற்றிக் கொண்டிருந்த போது கட்டியணைத்தபடியே தம்பதியர் இருவர் மரணத்தைத் தழுவியிருப்பதை மீட்புப்படையினர் கண்டு பிடித்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேசமுரசு

## காவல்துறைப் பராமரிப்பில் கைதி தற்கொலை

காலவல்துறை அலுவலகத்துள் கைதி ஒருவர் தூக்கிலிட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இச் சம்பவம் பம்பலப்பிட்டி காவல்துறை அலுவலகத்தில் இடம்பெற்றுள்ளது.

20ம் திகதி காலை வேளையில் கைது செய்யப்பட்ட இச் சந்தேக நபர் தனக்கு வழங்கப்பட்ட தேநீரை தற்செயலாக தனது உடை முழுவதும் ஊற்றியுள்ளார். இதனால் அவரது உடைகளைக் களைந்து கழுவி அணிவதற்காக அலுவ-லகத்தின் மற்றோர் இடத்திற்கு அனுப்-பப்பட்டுள்ளார். அங்கு தனது உடையி-னை கயிறாக்கி மேற்படி கைதி தூக்கிலிட்டுத் தொங்கியதாக காவல்-துறைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே இக்கைதி வேறு பல குற்றச் செயல்களுக்காகவும் பம்பலப்-பிட்டிக் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## "றோகன விஜயவீரவின் புதல்வி கைது"

ஜே.வி.பியின் தலைவர் மறைந்த றோகன விஜயவீரவின் 20 வயதான மூத்த புதல்வி காவல்துறைத் தடுப்புக்கு உள்ளாகியுள்ளார்.

தனது தாயையும், தம்பியையும் தாக்கியதாக அவர்கள் இருவராலும் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டை அடுத்தே இவர் கைதாகியுள்ளார்.

இவர் சிலவேளைகளில் குழந்தைக்கால மன அழுத்த நோய்க்கு உள்ளாகியிருக்கலாமென மனநல மருத்துவ நிபுணர் வைத்தியர் ஜயந் மெண்டிஸ் "தி இண்டிபெண்டன்" செய்திச்சேவைக்கு அளித்துள்ள செவ்வியில் தெரிவித்துள்ளார்.

விஜயவீரவின் மூத்த புதல்வி குழந்தையாக இருந்த காலப்பகுதியான 88, 89ம் ஆண்டுகளில் அவரது குடும்பமும் அவரும் இலங்கையில் நிகழ்ந்த போரின்போது கடும் மன அழுத்தங்களை சந்தித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. அதனால் அவர் இந் நோய்த்தாக்கத்திற்கு உள்ளாகியிருக்-கலாமென மனநல நிபுணர் தெரிவித்துள்ளார்.

இவ்வழக்கை விசாரித்த நீதிமன்றமும் மனநல வைத்திய அதிகாரியொருவரின் அறிக்கையைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்டுள்ளமை குற்ப்பிடத்தக்கது.

## பெற்றோரின் சண்டையால் பிள்ளை மரணம்

தகப்பனுக்கும் தாயுக்கும் இடையே நடந்த சண்டையில் சிக்கி ஐந்து மாத குழந்தை ஒன்று பலியாகியுள்ளது. தளவாக்கலை தோட்டமொன்றில் இச்சம்பவம் நடந்துள்ளது.

குழந்தை எவ்வாறு மரணித்தது என்பது பற்றி முன்னுக்குப்பின் முரணான தகவல்களே பெறப்-பட்டுள்ளன. பிரேத பரிசோதனையின் பின்னரே குழந்தையின் மரணத்திற்கான காரணம் தெரியவரும் என காவல்துறை தெரிவித்துள்ளது.

## மாத்தளைப் புதைகுழிகளின் விசாரணைக்குப் பொறுப்பான சட்ட வைத்திய அதிகாரி திடீர் இடமாற்றம்

உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் மாத்தளைச் சட்ட வைத்திய அதிகாரி வைத்தியர் அஜித் ஜெயசேனா குருணாகலைப் பொது வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

மாத்தளை மனிதப் புதைகுழிகளை வெளிச்சத்திற்கு கொண்டுவந்து அப் புதைகுழிகளின் மீதான பொது, விஞ்ஞானப் பரிசோதனைகளுக்குப் பொறுப்பாக இருந்த சட்ட வைத்திய அதிகாரியே இவ்வாறு திடீர் இடமாற்றத்திற்கு உள்ளாகியுள்ளார்.

இடமாற்றம் செய்யப்பட்டாலும் தானே மேற்படி விஞ்ஞான விசாரணைகளுக்குப் பொறுப்பான வராகத் தொடந்து செயற்படுவாரென்றும் வார இறுதி நாட்களில் மாத்தளைக்குப் பயணித்து விசாரணை அறிக்கைகளை எழுதி நீதிமன்றுக்குச் சமர்ப்பேன் என்றும் இடமாற்றப்பட்ட சட்ட வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

இப்புதைகுழி ஏற்படுத்தப்பட்ட காலப் பகுதியை நீதிமன்றம் தீர்மானிப்பதற்காக இச் சட்ட வைத்திய அதிகாரியினதும், தடவியல் பேராசிரியர் இராஜ் சோமதேவாவின் அறிக்கை-யினையும் வேண்டி நிற்பது குறிப்பிடத்தக்கது.



## ஜாதிக ஹெல உறுமயவின் கல்விச் செயலாளரின் தொழில் பறிக்கப்பட்டது

ஸ்ரீஜெயவர்தனபுர பல்கலைக்-கழகத்தில் தகுதிகாண் விரிவுரையா-ளராக பணிபுரிந்த பிரதீப் கருணாசூரிய உயர்கல்வி அமைச்சரின் பணிப்புரைக்-கமைய உடனடியாக பணிநீக்கப்-பட்டுள்ளார். இவ் விரிவுரையாளரே ஜாதிக ஹெல உறுமயவின் கல்விச் செயலாளராகவும் செயற்பட்டு வருகின்றார்.

ஜா.ஹெ.உறுமயவின் உள்ளக தகவல்களின்படி பல்கலைக்கழக ஆசிரியர் அமைப்பில் மிகச் சுறுசுறுப்பாக செயல்பட்டமையாலேயே இவரது பதவி பறிக்கப்பட்டுள்ளது எனத் தெரியவருகிறது.

## த.தே.கூ வின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வு அளியுங்கள்

### – ஜாதிக ஹெல உறுமய –

வடக்கிலுள்ள அனைவரும் அரசியல் ரீதியாக புனர்வாழ்வு அளிக்கப்பட்ட பின்னரே வடக்கில் தேர்தல் நடத்தப்படவேண்டுமென ஜாதிக ஹெல உறுமய கேட்டுக்கொண்டுள்ளது. இவ்வாறு வடக்கு மக்களை அரசியல் புனருத்தாரனத்திற்கு உற்படுத்துவதை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களிலிருந்தே ஆரம்பிக்க வேண்டுமென்று ஜாதிக ஹெல உறுமயவின் தேசிய அமைப்பாளர் தெரிவித்துள்ளார்.

## ஐ.தே.க வின் 11 பேர் ஜாதிக ஹெல உறுமயவிற்கு ஆதரவு



நாட்டிற்கு ஆபத்தை ஏற்படுத்தும் வகையில் மாகாண சபைச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும் விடயங்களை பிடுங்கி எறிவதற்கு தாம் மேற்கொண்டுள்ள முயற்சிகளுக்கு பதினொரு ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவளித்துள்ளார்களென ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில் 13வது திருத்தச் சட்டத்தில் மாற்றங்களை கொண்டுவருவதற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றுகொள்வது அசாத்தியமான விடயமல்ல என்று ஜாதிக ஹெல உறுமயவின் சட்ட ஆலோசகர் உதய கம்மன்பில்ல தெரிவித்துள்ளார்.

அப் பதின் மூன்றாவது திருத்தச் சட்டத்தினால் தேசத்தின் ஒற்றுமை, சுயகௌரவம், இறைமை போன்றவை இல்லாதொழிக்கப்பட்டிருக்கிறதென்று அவர் தெரிவித்தார். விசேடமாக காவல்துறை அதிகாரங்களை மாகாண சபைக்கு பகிர்தல் மிகவும் ஆபத்தானதென மேலும் தெரிவித்தார்.

## தம்பலகாமத்து கல்வெட்டுப் பற்றிய புதிய சிந்தனைகள்

ஜீவராஜ

13ஆம் நூற்றாண்டுக்குரியது என அறிஞர்களால் கருதப்படுகின்ற தமிழ்க்கல்வெட்டொன்று தம்பல-காமத்தில் கண்டெடுக்கப்பட்டது. இக்கல்வெட்டின் 'மைப்படியை' எடுத்த தொல்பொருள் திணைக்-களத்தினர் இச்சாசனம் திருகோண-மலையிலுள்ள "தம்பலகாமம்" என்னும் ஊரில் எடுக்கப்பட்டதாக தமது குறிப்பில் குறிப்பிட்டுள்ளனர்.

இச்சாசனம் குறித்து பேராசிரியர் திரு.சி.பத்மநாதன் அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார். இச்சாசனம் கற்பலகை ஒன்றில் எழுதப்பட்டுள்ளது. எழுத்துக்கள் அமைந்துள்ள பகுதி 1அடி 7அங்குல நீளமானது. எழுத்துக்கள் ஓரளவு பெரியவை. இவை சராசரியாக 15 அங்குல உயரமும் அகலமும் கொண்டவை. இச்சாசனத்தை 13 ஆம் நூற்றாண்டின் முற்பகுதிக்குரிய ஆவணமாகக் கொள்ளலாம்.

துண்டமாகிவிட்ட இச்சாசனத்தில் எல்லாமாகப் பதினொரு வரிகள் காணப்படுகின்றனவாம். முதல் நான்கு வரிகளும் சொற்கள் அடையாளம் காண்பதற்கு ஏற்றவாறு அமையவில்-லையாம். 5ஆவது வரி முதலான சாசனப்பகுதி கீழ்க்கண்டவாறு அமைந்-துள்ளதாகப் பேராசிரியர் திரு.சி. பத்மநாதன் அவர்கள் குறிப்பிடுகின்றார்.

5. உடையார் நிச்ச
6. யித்த ஜகதப்ப
7. கண்டன் தாநத்(து)
8. க்கு நிலையாக்(கித்)
9. தம்பலகாம ஊ
10. ரை நான் கெல்
11. லைக்கு தள எல்லை.

இந்தச் சாசனத்தில் முக்கியமான மூன்று விபரங்கள் காணப்படுகின்றன. முதலாவது "உடையார்" என்ற சொல் எழுதப்பட்டுள்ளது. உடையார் என்ற சொல் சாசன வழக்கில் அரசர்களை அல்லது அரச பிரதானிகளைக் குறிக்கும் என்பது ஆய்வாளர்கள் கருத்தாகும்.

இன்னொரு அதிமுக்கியமான விடயம் "தம்பலகாமம்" என்ற பெயர் குறிக்கப்பட்டுள்ளமையாகும். தம்பல-காமம் என்னும் பெயர் புராதனமானது. அது ஏறக்குறைய எண்ணூறு வருடங்களுக்கு முற்பட்ட காலங்களி-லிருந்து வழங்கி வருகிறது என்பது இச்சாசனித்தினூடாக உறுதியாகின்றது.

சாசனத்தின் மூன்றாவது முக்கியமான அம்சம் "ஜகதப்ப கண்டன் தானம்" என்பது பற்றிய குறிப்பாகும். "கண்டன்" என்பது போர் வீரனைக் குறிக்கும் சொல்லாகும்.

வரலாற்றுத்துறை பேராசிரி-யராகிய திரு.சி.பத்மநாதன் அவர்கள் இச்சாசனம் குறித்து ஆய்வுகள் செய்து இத்தகைய கருத்துகளை வெளியிட்டுள்-ளார்கள்.

பதினோராம் பன்னிரெண்டாம் நூற்றாண்டுகளில் திருகோணமலைப் பிரதேசத்தில் கந்தளாய் மயிலங்குளம் போன்ற இடங்களில் இத்தகைய படைகள் இருந்தன என்பது வரலாறாகும். இதே போன்று தம்பலகாமத்திலும் "ஜகதப்ப கண்டன்" என்ற பெயரால் வழங்கிய படையொன்று இருந்துள்ளது என்பது இந்தச் சாசனத்தின் மூலம் அறியப்படுகிறது.

கந்தளாய் கட்டக்குளப்பற்று, பதவியா, மன்னார் மாதோட்டம், புலச்சேரி, தேவபட்டினம் முதலிய இடங்களில் கலிங்கத்து மாகோன் தனது படை நிலைகளை அமைத்திருந்தான் எனப் பாளி சிங்கள வரலாற்று நூல்களில் சில குறிப்புகள் காணப்படுகின்றன.

பழமையில் திருகோணமலைப் பிரதேசத்தில் தம்பலகாமப்பற்று ஒரு தனி வன்னிமையின் ஆட்சியின் கீழ் அமைந்திருந்தது. இது வன்னியர்கள் பற்றிய தமிழ் நூல்களிலும் ஒல்லாந்த பிரித்தானிய நிர்வாக அதிகாரிகளின் அறிக்கைகளிலும் அடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தம்பலகாமம் சுமார் எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னால் அங்குள்ள ஆட்சியாளரின் ஏற்பாட்டின் பிரகாரம் ஒரு வீர பட்டினமாக வீரகணமொன்றின் காவலிலுள்ள வணிக நகராக இருந்ததா? என்ற சந்தேகங்களை வரலாற்றுப் பேராசிரியராகிய திரு.சி.பத்மநாதன் அவர்கள் தனது "தம்பலகாமத்துக் கல்வெட்டு" ஆய்வுக் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

(தொடரும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பலகாமம் த. வேலாயுதம்

# தம்பன் கோட்டை

நிறைவுப் பகுதி

## வரலாற்று நாவல்

தம்பன் கோட்டை அல்லோல கல்லோலப்பட்டுக் கொண்டு இருந்தது. கலிங்கவிஜயவாகு மன்னரின் எருதுக்-கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்-பட்டது. கோட்டையின் நான்கு மூலை-களிலும் கோட்டைக்கான கொடி அரைக்-கம்பத்தில் ஏற்றிவிடப்பட்டது. கொம்பு, குழல், தப்பட்டை, தாரை, பறை போன்ற வாத்தியங்கள் சோகமாக ஒலித்துக் கொண்டிருந்தன.

அலங்கரிக்கப்பட்ட முன் மண்டபத்தில் தளபதியின் உடல் வைக்கப்பட்டிருந்தது. அரசருக்கு சேதி அனுப்பப்பட்டு பதில் எதிர்பார்க்கப்பட்டுக்கொண்டிருந்தது.

உதயனை, யானை போட்ட கல்லிலிருந்து விடிவதற்கு முன்னமே, தளபதியின் உடலை கோட்டைக்கு கொண்டு வந்து சேர்த்துவிட்டான் இளஞ்செழியன்.

இளஞ்செழியன்தான் முதலில் சுயநினைவுக்கு வந்தவன். உடனடியாக பத்து வீரர்களை சதுர்வேதமங்கலம் நோக்கி அரசரிடம் எப்படியாவது சேதியைச் சொல்லி பதிலைக் கொண்டு வருமாறு பணித்துவிட்டு, இன்னும் பத்துப்பேரை கடும்விரைவில் கோட்டை-க்குள் சென்று ஆயத்தங்கள் செய்யு-மாறு பணித்து விட்டு, உதயகுமரனின் உடலை நன்கு போர்வையால் சுற்றி குதிரைமேல் கிடத்தி தம்பன் கோட்டை நோக்கி மீதி வீரர்களுடன் விரைந்தான்.

தளபதி பொறுப்பை ஏற்ற சொற்ப காலங்களிலேயே அனைவரது அன்பையும் தன் எளிமையான பண்பு-களால் கவர்ந்திழுத்திருந்த தளபதியின் சாவு பற்றி அறிந்ததும் எல்லோரும் வாய்விட்டுக் கதறினர்.

ஊர் மத்தியில் சேதி பரவி சாரி சாரியாக வந்து மரியாதை செலுத்திச் சென்றனர் மக்கள். சோகத்தின் மத்தியிலும் கண்ணீர் தாரையாக வடிந்து நிற்க படைவீரர்கள்மரியாதை அணி-வகுத்து நின்றனர்.

ரங்கநாயகி விடிந்ததும் விடியாத-துமாக வீட்டு முற்றத்தில் வந்து நின்று கொண்டிருந்தாள்.... அவள் மனம் வெறுமையாகக் கிடந்தது உற்சாகம் உடலிலும் இருக்கவில்லை. அவள் உணர்விலும் இருக்கவில்லை.

திடீரென்று தடதடவென்று குதிரைக்-குளம்பொலி அவர்களது வீட்டுப்பக்கம் வந்து கொண்டிருந்தது. அவர் வருகி-றாரோ என்று நினைத்த மாத்திரத்திலே அவள் இதயம் அவனைப் பார்த்துவிட தொண்டைக்-குழிவரை வந்துவிட்டது போலிருந்தது. வந்தது உதயகுமர-னில்லை. ஒரு போர்வீரன்! செய்தியை இளஞ்செழியன் அனுப்பியிருந்தான். அவன் சொன்ன சேதியைக் கேட்டதும் அப்பா என்ற ஒரு அலறல் அவள் அடித்தொண்டையில் இருந்து வந்தது. பிறகு கொஞ்ச நேரம் கோட்டை இருந்த பக்கம் திரும்பி சலனம் ஏதுமின்றி நின்றவள் அப்படியே மயங்கி வீழ்ந்தாள்.

மதியத்திற்கு முன்னதாக அவளை மயக்கம் தெளியப் பண்ணி அத்தையும், சில பெண்களுமாக கைத்தாங்கலாக அழைத்து வந்தனர். அவனைக் கடைசித் தடவையாகப் பார்க்க வேண்டும் என்று போராடத் தொடங்கிவிட்ட அவளை, அடக்க-வேண்டுமானால் அழைத்துச் செல்ல வேண்டும் என்ற நிலை கண்டு அவளை அழைத்து வந்தனர்.

உதயகுமரனின் உடல் மலர்களால் அலங்கரிக்கப்பட்டு இருந்தது. நெற்றித் திலகம் அவனது முகத்தின் கவர்ச்சியை தூக்கலாக்கியது. வயிற்றுப்பகுதி சேதத்தை மறைக்கவோ என்னவோ அவனது வாளும் கேடயமும் வைக்கப்பட்டிருந்தன. அவனது உயிரற்ற உடலைக் கண்டதும் அவள் அலறிக் கத்திக்கொண்டு விழுந்து மூர்ச்சை-யானாள். அவளுக்குள் ஒரு நரம்பு அறுந்தமாதிரி ஒரு உணர்வுடனேயே அவள் நினைவிழந்தாள்.

மாட்டுவண்டி எடுத்துவந்து பிரேதம் போல அவளை வீடு கொண்டு சென்றனர். அவளுக்கு நினைவு தெளிய ஒரு நாளாயிற்று. அதற்கிடையில் உதயகுமரனை அரசரின் ஆக்ஞைப்படி சதுர்வேத மங்கலத்திற்கு மங்கலத்தேரில் வைக்கப்பட்டு எடுத்துக் கொண்டு போகப்பட்டது. தம்பலகாமம் பிரதேசம் அடங்கிலும் ஒரே சோகமயம்தான்.

இதற்கிடையில் மரக்கட்டை-போல் வீட்டிற்குக் கொண்டு வரப்பட்ட மகளைக் கண்டதும் வைத்திலிங்கம் பிள்ளை சிறு பிள்ளை போல அரற்றத் தொடங்கிவிட்டார். அவரைத் தேற்றுவதே பெரும்பாடாயிற்று.தம்பை நகர் என்ற தம்பல-காமத்து இராஜ வைத்தியர் நமச்சிவாயப் பரியாரியாரின் உயிர் காக்கும் மிர்தி சஞ்சீவி மாத்திரைப் பிரயோகமே அவளைப் பிழைக்கச் செய்தது. ரங்கநாயகி இறந்துவிடுவாள் என்றே பலரும் நம்பினர். ஆயினும் பிழைத்துக் கொண்டாள். கொடிய கருநாக சர்ப்பத்தின் வாயில் அகப்பட்டுத் தப்பிய தேரைபோல சில காலம் ஒடுங்கிக் போயிருந்தாள்.

முன்னாள் தளபதி தம்பருக்கே மருத்துவம் செய்து வித்தைகாட்டிய இராஜாங்க வைத்தியரின் கைராசியால் ரங்கநாயகியும் சற்றுத் தேறலானாள். அவளது சங்கீதத் திறமை, அழகு இரண்டையும் கேள்விப்பட்டு எத்தனை-யோ பல ஊர்களிலிருந்து பெண் கேட்டு வந்தார்கள். தன் அருமை மகளைத் தன் கண் மூட முன்னமே ஒரு நல்லவன் கையில் கொடுத்து அவளை ஒப்பேற்றி விடவேண்டும் என்ற நினைவிலேயே இருந்த வைத்திலிங்கம் பிள்ளை வரன்களை வரச்சொல்லி அவளது பதிலைக் கேட்டபோது, ரங்கநாயகி ஒரு தர்பாரே நடத்திவிட்டாள்.

அப்பா என் அன்பர் பயங்கர மரணம் அடைந்த சேதியைக் கேட்ட-துமே நான் இறந்திருக்க வேண்டும். பாவி ஏன் உயிரோடு இருக்கிறேனோ தெரிய-வில்லை. அப்பா... நீங்கள் நான் இருக்கின்ற காலம் வரை இந்த நிம்மதியுடன் இருக்கவிடுவதாக இருந்தால் திருமணம் என்ற பேச்சை என் காது கேட்கச் சொல்லாதீர்களப்பா!

*சென்ற வாரம்...*
*வீரர்கள் வாய்விட்டு அலறத் தொடங்கினார்கள். வெகுநேரம் ஆயிற்று அவர்கள் அழுகை நிற்க*

அவள் கேவிக் கேவி அழலா-னாள். அவரும் அவளுடன் சேர்ந்து அழுதார். இனி அவளிடம் இந்தப் பேச்சை எடுப்பதேயில்லை... அவளாக ஒரு முடிவுக்கு வந்தாலொழிய... நானாக அவளை நெருக்கக் கூடாது என்று அவள் இடத்திற்கு விட்டுவிட்டார்.

சின்ன வயதிலேயே வெள்ளை உடுத்து விதவைக்கோலம்பூண்ட ரங்கநாயகி, சமயங்களில் குடமுருட்டி-யாறு வெண்மணல் பரப்பில் நின்று சத்தமாக ராகங்களை இசைப்பாள். அதை உதயகுமாரன் கேட்கவேண்டும், கேட்டுக்கொண்டிருப்பான் என்ற உணர்வு அவளுக்குள் இருக்கும், அல்லாது போனால் கலிங்கத்து விஜயன் கட்டி கலகக்காரர்களால் அழிக்கப்பட்டுப் பின்னர் குளக்கோட்டன் மன்னனால் கட்டப்பட்ட தம்பலகாமம் கோணேச்வரர் ஆலய தெற்கு வாயிலுக்கு எப்போ-தாவது வருவாள். உள்ளே எழுந்தருளி இருக்கும் கோணேஸ்வரப் பெருமானை நோக்கி இரு கரங்களையும் சிரசில் கூப்பி

*நீர்வளச் சிறப்பும் நிலவளச் சிறப்பும்*
*நிகரில்லாப் பெருவளம் கொழிக்கும்*
*ஊரதன் பெயரே தம்பலகாமம்*
*உழவர்கள் வாழ்ந்திடும் பேரூர்*
*சீர்மிகு வயல்கள் ஆறுடன் சூழ்ந்த*
*கோயில் குடியிருப்பெனும் பதியில்*
*கூர்வளைப் பிறையும் கொன்றையும் அணிந்த*
*கோண நாயகர் அமர்ந்தாரே*

என்று தன் குயில்க் குரலால் பாடுவாள். அப்போது தானும் உதயகுமரனும் குடமுருட்டியாற்று வெண்மணற்பரப்பில் அமர்ந்து பாடிய நாட்கள் நினைவுக்கு வரும். அவள் கண்கள் இரண்டும் அருவியாய் மாறும்.

**தம்பன் கோட்டையின் வாசகர்களே!**
**திருமலையில் முக்கிய வரலாற்று நாவலொன்றை தொடராக பிரசுரித்துள்ளோம். இந் நாவல் தொடர்பாக உங்களது மனப்பதிவுகளை தயவுசெய்து எழுதவும்**




# இராவணன்

இராவணன் போல் ஒரு தமிழ் வீரன் இராமாயணத்தில் இல்லை.. கதைக்காக தமிழனை அப்படி காட்டியிருந்தாலும்.. அவனின் வீரம்போற்றுதலுக்குரியது.. மற்றும் மாற்றான் தோட்டத்து மல்லிகையை அவனின் கை படாது வைத்திருந்த கண்ணியவான்.. உண்மையில் தமிழ் உலகம் தந்த மாபெரும் வீரன் அவன். வரலாற்றின் திரிபுகளால் கொடுங்-கோலன் ஆக்கப்பட்டான்.

ஆனால் என்னைப் பொறுத்தவரைக்கும் சிறந்த சிவபக்தன். இராமனை விட மேலானவன் இராவணன். இராவணன் இலங்கையை ஆட்சி செய்த அரசனாகவும், பக்தனா-கவும், இராமனுக்கு நேர் எதிராகவும் இராமாயணத்தில் சித்தரிக்கப்பட்ட தீய கதாபாத்திரம் ஆவார். பல ஓவியங்களில் இராவணன் பத்துத் தலைகளை உடையவனாக சித்தரிக்கப்-படுகின்றார். இராவணனுடைய ஆட்சியின் போது இலங்கை வளமாகக் காணப்பட்ட-தாகவும், இராவண்ன் விமானம் ஒன்றை வைத்திருந்ததாக இராமாயணம் கூறுகின்றது. வாரியபொல - “வானோடும் களம் இறங்குமிடம்” போன்ற ஊர் பெயர்களும் இலங்கை-யில் உண்டு என்பது இங்கு குறிக்கத்-தக்கது. இராவணன் பிராமணராகவும், சிவபக்தி மிகுந்தவனாகவும் சித்தரிக்கப்-படுகின்றார். அதேவேளை, அவன் ஒரு அசுரனாகவும், அசுரர்களின் அரசனா-கவும் சித்தரிக்கப்படுகின்றான். இராவணன் பற்றிய நோக்குகள் இலங்கையிலும், தமிழ்நாட்டிலும், இந்தியாவின் பிற பகுதிகளிலும் வேறுபட்டு காணப்படுகிறன

### *இராமாயணத்தில் இராவணன்*

இராமாயணத்தில் இராவணன் இராமரின் மனைவியான சீதையைக் கடத்தி சென்றதாகவும், இலங்கையில் சிறைவைத்துத் திருமணம் செய்ய எத்தனித்ததாகவும். இவன் பல பெண்களை பலாத்கரமாக தன் மனை-விகளாக அடைந்ததாகவும் சித்தரித்தனர். மண்டோதரி, வேதவதி, ரம்பா ஆகியோர் இவர் மனைவியர்கள். இராமன் ஆண்டாலென்ன இராவணன் ஆண்டாலென்ன - நாட்டு நிலைமை பற்றி எவ்வித அக்கறையும் இல்லாமல் இருப்பவர்களைப் பார்த்து இப்படிச் சொல்வது வழக்கம். அதாவது இராமன் ஆண்டால் நாடு நன்றாக இருக்கும் என்றும், இராவணன் ஆண்டால் நாடு மோசமாக இருக்கும் என்றும் கர்ண பரம்பரையாக சொல்லிக்கொண்டிருக்-கிறோம். உண்மையில், இராமன் ஆட்சி என்று சொல்லப்படுவது, சிம்மாசனத்தில் உட்கார்ந்திருந்த செருப்பின் ஆட்சிதான். அந்த ஆட்சியின்போது இராமனும் சீதையுமே காட்டில் திரிய வேண்டியி-ருந்தது என்றால், அந்த நாட்டு மக்கள் எங்கெங்கே திரிந்திருப்பார்களோ! வனவாசம் முடிந்து நாடு திரும்பிப் பட்டாபி'கம் செய்து கொண்ட பிறகாவது ராமனால் சிறப்பாக ஆட்சி செய்ய முடிந்ததா? இல்லை.... யாரோ எதையோ சொன்னார்கள் என்று மனைவி சீதையை தீக்குளிக்கச் செய்த பெண்ணடிமைத்தனம்தான் அந்த ஆட்சியில் நிலவியது. அதன்பிறகும் அவளைக் காட்டுக்கு அனுப்பிவிட்டான் மகாராசன் இராமன். இப்படியெல்லாம் சீதை என்ற பெண் தன்னந்தனியாக திரிய வேண்டியிருந்ததை மனத்தில் வைத்துத்தான்,.

### *இராவணன் ஆட்சி எப்படி நடந்தது?*

அவன் ஆண்ட இலங்கையின் அழகையும், அங்கிருந்த, மக்களின் செழிப்பான நிலையையும், கலைகள் ஓங்கியிருந்த சூழலையும் கம்பன் வர்ணித்திருக்கும் விதத்திலிருந்தே தெரிந்து கொள்ள முடியும். நல்லது நடப்பதைப் பொறுத்துக்கொள்ள முடியாத வயிற்றெரிச்சல்காரர்கள் அதைக் கெடுக்க நினைப்பது போல, ஓங்கியுயர்ந்த மாளிகைகளைக் கொண்ட இலங்கையை இராம பக்தனான அனுமன் தன் வாலில் பற்றிய தீக் கொண்டு அழித்ததையும் இராமாயணம் வர்ணிக்கிறது. எப்படிப் பார்த்தாலும் இராமனின் அயோத்தியைவிட ஆயிரம் மடங்கு உயர்வானதாகவே இருந்தி-ருக்கிறது இராவணன் ஆண்ட இலங்கை. அப்புறம் என், நல்ல ஆட்சியை இராமன் ஆட்சி என்றும் மோசமான ஆட்சியை இராவணன் ஆட்சி என்றும் சொல்கிறோம்? இந்தக் கேள்விக்கான விடையைத்தான் 60 ஆண்டுகளுக்கு முன்பு உரக்கச் சொல்லின திராவிட இயக்கங்கள். ஆரிய ஆதிக்கத்தின் விளைவால், தமிழ் மகாகவியான கம்பன் ஆரியத்தின் தாசானு தாசனாகி, வால்மீகியையும் மிஞ்சிடும் வகையில் கற்பனைப் பாத்திரங்களான இராமனைத் தெய்வம் என்றும் தமிழ் மன்னனான இராவ-ணனை அரக்கன் என்றும் சித்திரித்து இராமாயணத்தைப் படைத்தான். கவிச்சுவையிலும், பக்தி சொட்டும் தமிழிலும் கம்பன் பின்னி எடுத்திருந்த காரணத்தால் இராமனே நமக்கும் தெய்வமானான். தமிழ் மன்னனான இராவணன் அரக்கன் ஆனான். இந்த ஆரியப் பண்பாட்டு படையெடுப்பை விரட்ட வேண்டும், காப்பியங்கள் வழியாகத் தமிழ் மக்களின் மனங்களில் வரையப்பட்டுள்ள இழிவான சித்திரம் அழிக்கப்படவேண்டும் என்பதைத் திராவிட இயக்கங்கள் போர்க்குரலோடு வலியுறுத்தின.

*(இன்னும் நடுவோம்)*

செந்தூரன்

**சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்போம்**
**குற்றங்கள் நிகழும் பொழுதில் அழையுங்கள் தொலைபேசி எண்**
**1929**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



மூரசின்

# உலக வலம்

## இந்தியாவிலேயே முதல் முறையாக 7டி [7 பரிமாண] பட மாளிகை

சென்னை புரசைவாக்கம் அபிராமி மெகா மாலில் இந்தியாவிலேயே முதல்முறையாக 7டி (7 பரிமாண) தியேட்டர் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதன் திறப்பு விழா கடந்த திங்கட்கிழமை நடந்தது. இசையமைப்பாளர் தேவா திறந்து வைத்தார். தியேட்டர் குறித்து அதன் உரிமையாளர் அபிராமி ராமநாதன் நிருபர்களிடம் கூறியதாவது: முதல் பரிமாணம் என்பது சிறந்த முப்பரிமாணத்தில் படம் பார்ப்பது. 2வது அற்புதமான அதிரும் ஒலி கொண்டது. 3வது உணர்வது. 4வது நறுமணம். 5வது காற்று மற்றும் மின்னல். 6வது மழை. 7வது பனிப்பொழிவு. இந்த ஏழு பரிமானங்களையுமே 7டி என்கிறோம்.

இந்த 7டி தியேட்டருக்கான உபகரணங்கள் மற்றும் 7டி படங்கள் இஸ்ரேல் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. டிஜிட்டல் மயமாக்கப்பட்ட திரையரங்கில், அதிர்வுகளுடன் கூடிய இருக்கைகள், சவுண்ட் சிஸ்டம், நீர் அலைகள், மழை, பனிப்பொழிவு மற்றும் முற்றிலும் ஒரு புதிய அனுபவத்தை உணர்ந்து பரவசப்படும் விதத்தில் தொழில்நுட்பங்கள் கையாளப்பட்டுள்ளன. படம் பார்க்கும்போது ரசிகர்கள் அமர்ந்திருக்கும் இருக்கைகள் அசையும். மழைச்சாரலையும் பனிப்பொழிவையும், குளிர்ந்த நீரின் அற்புதத்தையும் நன்கு உணர முடியும். புயல், சூறாவளி, இடி, மின்னல் ஏற்படும். திரையில் எந்த காட்சியைப் பார்த்து ரசிக்கிறார்களோ, அதற்கு மத்தியில் ரசிகர்களும் இருக்கும் மாயத்தை உணர்வார்கள். அபிராமி மெகா மால் நிறுவனத்துடன் ரீல் பேக்டரி மீடியா ரவிசங்கர், சரண்யா இணைந்து 7டி தியேட்டரை வடிவமைத்துள்ளனர் என்றார்.

## பிணமான ஆணுடன் உடலுறவு – பெண் கர்ப்பம்

பிண அறையில், இறந்த ஆணுடன் உடலுறவு வைத்துக்கொண்ட பெண் கர்ப்பமான சம்பவம் அமெரிக்காவில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் லெக்ஸிங்டன் நகரில் உள்ள ஒரு மருத்துவமனையில், பிணவறை ஊழியராக 38 வயதுடைய பெண் ஒருவர் கடமைபுரிந்து வந்துள்ளார்.

மருத்துவ பரிசோதனையில், குறித்த பெண் கர்ப்பமாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இவரது நடவடிக்கைகளில் சந்தேகப்பட்ட நிர்வாகம் காவல்துறைக்குப் புகாரளித்தது.

காவல்துறை விசாரணையின் போதுதனது வாக்குமூலத்தில் தான் பிணவறையில் கடமைபுரிந்தபோது, திடீர் மரணமான ஆணின் சடலம் ஒன்று வந்ததாகவும், அப்போது தனக்கு தோன்றிய சபல எண்ணத்தால், அப் பிணத்துடன் உடல் ரீதியான உறவு வைத்துக்கொண்டதாகவும், இதனால் தான் கர்ப்பமானதாகவும் தெரிவித்தார்.

பிணத்தின் மூலம் கர்ப்பமாவதன் சாத்தியத்தன்மை தொடர்பில் விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ள பொலீசார், குறித்த பெண்ணின் வாக்குமூலத்துக்கு அமைய, அப் பெண் மீது வழக்கு பதிவு செய்து அப் பெண்ணை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

நீதிமன்றம் அப் பெண்ணுக்கு 250,000 டொலர் பிணை விதித்துள்ளது.

## அதி சொகுசு ரயில் நிலைய நிர்மாணிப்பில் சவூதி

உலகின் அதி சொகுசான ரயில் நிலையத்தை நிர்மாணிக்கும் பணியினை சவுதி அரேபியா ஆரம்பிக்கவுள்ளது. அந்நாட்டு தலைநகரான றியாத்திலேயே இது நிர்மாணிக்கப்படவுள்ளது. இதற்கான உத்தரவை அந்நாட்டுமன்னர் வழங்கியுள்ளார். 4 வருடங்களுக்குள் அமைத்து முடிக்கப்படவுள்ள இச் சொகுசு ரயில் நிலையம் தங்க முலாம் பூசப்பட்ட சுவர்கள், பளிங்கினால் உருவாக்கப்பட்ட பாதைகள் என பல முக்கிய அம்சங்களை குறித்த ரயில் நிலையம் கொண்டிருக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனை ஷா ஹதித் என்பவரே வடிவமைத்துள்ளார். தற்போது வெளியாகியுள்ள அதன் மாதிரி படங்கள் பார்ப்போரை ஆச்சரியத்திற்குள்ளாக்குவதாக உள்ளது.

## உலகப் பணக்காரர்களின் முதலிடத்தை மீண்டும் கைப்பற்றினார் பில்கேட்ஸ்

உலகப் பணக்காரர் வரிசையில் இரண்டாம் இடத்தில் இருந்த பில்கேட்ஸ் தற்பொழுது முதலாம் இடத்தை கைப்பற்றியிருப்பதாக தற்போது செய்திகள் வெளியாகியுள்ளது.

மெக்ஸிகோவின் ஹாலோ சிலிம் தான் இதுவரை உலகப் பணக்காரர்களுள் முதலிடத்தில் இருந்தார் இப்பட்டத்தை 2007ம் ஆண்டின் பின் முதல் தடவையாக கைப்பற்றியுள்ள பில்கேட்ஸின் சொத்துக்களின் மதிப்பு இன்றைய திகதியில் 72.7 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.

மைக்ரோ சொப்ட் நிறுவனத்தில் அவரது பங்குளின் விலை 27 வீத அதிகரிப்பைப் பதிவு செய்ததால் பில்கேட்ஸ் உலகின் முதல் பணக்காரர் ஆனார்.



## 80 வயது ஜப்பானியர் எவரஸ்ட் நோக்கி!!

உலகின் அதி உயர்ந்த மலைச் சிகரமான எவரஸ்ட்டை நோக்கி 80 வயதான ஜப்பானியர் தனது பயணத்தை ஆரம்பித்துள்ளார். அவர் இச் சிகரத்தை தொடுவாராயின் எவரெஸ்ட்டை தொட்ட அதிகூடிய வயதானவர் என்ற பெருமையையும் பட்டத்தையும் அவர் வெல்வார்.



## ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள் – 16

பிரதீபா

1. இலைகளை கொண்டிராத தாவரம் பின்வருவனவற்றுள் எது?
   1. நாகதாளி 2. கற்றாளை 3. முட்செடி
2. சூரியகாந்தி பூவை ஒத்த பூவைக் கொண்ட தாவரம் எது?
   1. தாமரை 2. மூக்குத்திப்பூண்டு 3. கொன்றை
3. வீட்டுத்தோட்டத்தில் வளரும் நாருரு வேரைக் கொண்ட தாவரம் எது?
   1. பப்பாசி 3. பசளி 3. இறம்பை
4. வெள்ளப்பெருக்கு ஏற்படும் போது கொள்ளைநிலைத் தாக்கத்தை ஏற்படுத்தும் நோய் எது?
   1. வாந்திபேதி 2. டெங்கு 3. மலேரியா
5. இலங்கையின் தேசப்படத்தில் நதிகளை குறிப்பதற்கு பயன்படுத்தும் நியம நிறம் எது?
   1. நீலம் 2. சிவப்பு 3. கறுப்பு
6. பண்டைய இலங்கையின் வரலாறு பற்றிக் கூறும் நூல் எது?
   1. மகாவம்சம் 2. திரிபீடகம் 3. சூல தீபம்
7. ஒருவர் தனது பிறப்பு அத்தாட்சி பத்திரமொன்றின் பிரதியொன்றை பெறுவதற்கு முதலில் செல்ல வேண்டிய இடம் எது?
   1. கிராம அலுவலகம் 2. பிரதேச சபை 3. மாநகர சபை
8. பலாப்பழம் வெட்டும் போது கையில் பூசப்படும் பதார்த்தம் எது?
   1. தேங்காயெண்ணெய் 2. ஆமணக்கு எண்ணெய் 3. நெய்
9. தினமும் உணவில் மஞ்சள் நிற காய்கறி வகைகளை உட்கொள்வதால் தடுக்கக்கூடிய நோய் எது?
   1. கண்டமாலை 2. மாலைக்கண் 3. அனிமியா
10. பண்டைய மக்களின் கலாசார, பண்பாட்டு அம்சங்கள் காணப்படும் இடம் எது? 1. சிகிரியா 2. பொலநறுவை 3. தம்புள்ள
11. வெயில் காலங்களில் அதிகளவு உண்ணும் பழவகை எது?
    1. வெள்ளரி 2. மாம்பழம் 3. கொய்யா
12. குமரனை மக்கள் புகழ்ந்து பேசினார்கள். இதில் தடித்த எழுத்தில் உள்ள சொல்லின் எதிர்ச்சொல் எது?
    1. பெருமையாக 2. இகழ்ந்து 3. பாராட்டி

**கீழ்வரும் பாடலை வாசித்து விடையளிக்குக.**

புவி நெகிழும் படியழகுப்
பூஞ்செடிகள் வளர்ப்போம்
புத்தம் புதுப் புக்களங்கு
பூக்கக் கண்டு களிப்போம்

13. புவி நெகிழ்வதற்கு என்ன செய்ய வேண்டும்?
    1. நீர் ஊற்ற வேண்டும் 2. பூஞ்செடி வளர்த்தல் 3. களிப்போம்
14. எது பூப்பதைக் கண்டு களிப்போம்?
    1. பூக்கள் 2. தேனீக்கள் 3. தாவரங்கள்


**கீழுள்ள தகவலை வாசித்து 15, 16 ம் வினாக்களுக்கு விடையளிக்குக.**

சரத், மஜித், சாஜித், சரண் ஆகியோர் 200மீ ஓட்டப்பந்தயத்தில் பங்குபற்றினர். மஜித், சரணை விட வேகமாக ஓடிய போதிலும் சாஜித்துக்கு பின்னாலேயே ஓடினான். எனினும் சரத், சாஜித்தை விட மிக வேகமாக ஓடினான்.

15. ஓட்டப்பந்தயத்தில் இறுதியாக வந்த மாணவன் யார்,
    1. சரத் 2. சரண் 3. மஜித்
16. ஓட்டப்பந்தயத்தை நிறைவு செய்த ஒழுங்கைக் காட்டும் விடை எது?

| 1. | 2. | 3. |
|---|---|---|
| சரண் | சரத் | சரத் |
| மஜித் | சாஜித் | மஜித் |
| சாஜித் | மஜித் | சாஜித் |
| சரத் | சரண் | சரண் |

17. பின்வரும் உருவின் சுற்றளவு யாது?




1. 17Km
2. 24Km
3. 19Km

18. 3,9,6 ஆகிய எண்களைப் பயன்படுத்தி ஆக்கக்கூடிய மிகப்பெரிய எண் யாது? 1. 369 2. 963 3. 693

பெயர்: ..........................................................
..........................................................
முகவரி: ..........................................................
..........................................................
..........................................................
பாடசாலை: ..........................................................

## தரம் ஐந்து மாணவர்களுக்கான புலமைப் பரிசிற் போட்டி

மேலுள்ள கேள்விகளுக்கான சரியான விடைகளை குறித்து அனுப்பி வாராந்தம் பரிசில்களை வெல்லுங்கள்.

மேலுள்ள கேள்விப் பகுதியை நிரப்பி வெட்டி அதனை மலைமுரசு, இல 159 A, கடல் முக வீதி திருக்கோணமலை என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். வாராந்தம் பரிசுகளை வெல்லுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடை தாண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

மாயன்

அரச ஊதுகுழலாகச் செயற்படும் முண்ணனி ஆங்கில நாளேடு ஒன்றின் இந்த வாரச் செய்திகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனித்தனிக் கட்சிகளாகப் பிளவுண்டு போவதற்கு முனைப்புக் காட்டிவருகின்றது எனச் செய்தியினை வெளியிட்டிருந்தது.

அச் செய்தியினை வரைவதற்கான அடிப்படைகள் கடந்த மாதம் முதலே வெளியான அல்லது நடைபெற்ற மூன்று விடயங்களிற் தங்கியிருந்தது.

முதலாவது விடயம் திருமலை நகரில் நடைபெற்ற தமிழ் ஈழ விடுதலைக் கழகத்தின் (டெலோ) மத்திய குழு உறுப்பினர்களின் கூட்டத்தின் பின்னர் வெளியிடப்பட்ட அறிக்கையில் சேர்க்கப்பட்டிருந்த சரத்துக்கள், தமிழரசுக் கட்சியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கட்சியாகப் பதிவதற்கு தயாரின்றி இருக்கின்றது என்பதை வெளிப்படையாகவே காட்டியிருந்தது.

அதனை நிவர்த்தி செய்வதற்காக மன்னார் மாவட்ட ஆயர் அவர்களின் நடுநிலையுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அனைத்துக் கட்சிகளும் தனிக்கட்சிப் பதிவு தொடர்பாகப் பேசித் தீர்மானிக்கப்படும் நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவித்திருந்தது.

அதைத் தொடர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகள் ஐந்தும் மன்னாரில் ஆயரின் நடுநிலையுடன் பேச்சுக்களில் ஈடுபட்டன. எனினும் அப் பேச்சுக்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தனிக் கட்சியாகப் பதியும் தீர்வை ஐந்த கட்சிகளாலும் எட்ட முடியாமல் கலைந்து போயிருந்தன.

மூன்றாவது நிகழ்வாக தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் சுமந்திரனின் தலைமையில் கஜேந்திரகுமார், குமரகுருபரன் மற்றும் சிரேட்ட சட்டத்தரணி புவீந்திரன் ஆகியோர் தமிழருக்கான அரசியல் தீர்வு ஒன்றின் மாதிரியை வரைந்து கொள்வதற்காக கடந்தவாரம் கூடியிருந்தனர். எனினும் அதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கையின் போதே அம்முயற்சி கைகூடாமல் போய்விட்டது.



இவை அனைத்தையும் பார்க்கும் போது தோன்றுவது என்ன? தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒற்றுமை நோக்கிய போக்கில் தடுமாறி, தடம்மாறித் தனித்தனியாகச் சென்று விடும் என்றா?

தமிழ்த்தேசியம் மற்றும் அதனை முன்னிறுத்தி போரிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியவற்றின் எதிரிகளும் அவ் எதிரிகளுக்கு தாளம் போடும் ஊடகங்களும் இதனைத் இவ்வாறே எழுதி, ஒலி ஒளிபரப்பி ஒரு தடுமாற்ற சிந்தனையை தமிழர்களிடையே பரப்பி விடும் முயறிசியில் இறங்கியிருக்-கின்றன. அதற்கு அணி சேர்க்கும் விதமாக பொதுவான அல்லது ஆய்வு நோக்கற்ற பார்வையாளர்களும் எழுத்தாளர்களும் கூட அதனை முன்னிறுத்தி எழுதவும் பேசவும் எத்தனிக்கலாம்.

ஆனால் ஒரு குடையின் கீழ் ஒற்றுமைப்பட மேற்கூறப்பட்ட மூன்று உட்பட மேற்கொள்ளப்பட்ட, மேற்கொள்ளப்படப் போகின்ற முயற்சிகள் யாவும் பெரும் சாதகப் பக்கத்தையே கொண்டுள்ளன என்பது மிகக் கவனமாக அனைத்துத் தமிழ் மக்களாலும் புரிந்து கொள்ளப்பட வேண்டிய விடயம் ஆகும்.

ஒற்றுமை என்பது ஒரு இரவில் அல்லது ஒரு சந்திப்பில் எப்போதுமே ஏற்பட்டு விடக்கூடிய ஒன்றல்ல அத்துடன் ஒற்றுமைப்படக் கூடியிருக்கின்ற கட்சிகளின் ஆரம்பமும் அவற்றின் கடந்த 30 ஆண்டுகாலப் போக்குகளும் எப்படியிருந்தன என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.

உண்மையில் மூன்று முன்நாள் விடுதலை இயக்கங்களையும், இரண்டு அரசியற் கட்சிகளையும் இணைத்து உருவாக்கப்பட்ட அமைப்பே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகும். அரசியல் விடுதலையை ஆயுதம் மூலம் வென்றெடுக்கப் புறப்பட்டவர்களின் ஆழ்மன போக்கு போரின் மூலம் விடுதலை என்பதாகவே இருந்தது.

ஆனால் அரசியல் கட்சியாக செயற்பட்டு வந்த இரு கட்சிகளும் கடந்த முப்பதாண்டுகளில் மூவகை நிலைப்பாடுகளுக்குள் உள்ளடக்கப் பட்டிருந்தவை ஆகும்.

அவை ஆரம்பக் காலத்தில் தமிழரின் விடுதலைப் படையாக (தமிழர் விடுதலைக் கூட்டணியின் அமிர்தலிங்கத்தை - தளபதி என்று அழைத்த காலம் உள்ளது) உணரப்பட்டு இருந்தனர். பின்னர் ஆயுதப் போர் முனைப்புற்ற காலத்தில் அவ்விரு கட்சிகளினதும் தலைமைகள் தமிழரின் துரோகிகளாகக் கருதப்பட்டனர்.

ஆயுதப் போரிலிருந்து அரசியல் நீரோட்டத்திற்குள் இணைந்துகொண்ட அந்த மூன்று ஆயுதக் குழுக்களும் , துரோகிகளாகக் கருதப்பட்ட இரண்டு அரசியல் கட்சிகளும் இணைந்து தமிழரின் அபிலாசைகளைத் தீர்த்து வைப்பதற்கான அரசியல் முண்ணனியாக உருவாகியதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக உள்ளது.

எனவே இவ் ஐந்து கட்சிகளும் தாமாகவே ஒற்றுமைப்படுவதென்பது



எவ்வாறு என்பதும் அதற்காககப் பயணிக்க வேண்டிய பாதை எவ்வளவு தூரமானது என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

கடந்த வாரத்தில் யாழப்பாணத்தில் தமிழரசுக் கட்சியின் மூத்தலைவர் மாவை அவர்கள் "தமிழத் தேசியக் கூடடமைப்பின் அடித்தளம் தமிழரசுக் கட்சியே'' என்று இயம்பியிருந்தார். அவ்வாறாயின் அடித்தளமாக உள்ள கட்சியொன்றால் ஏன் தம்மீது கட்டப்பட்டுள்ள ஏனைய கட்சிகளை கட்டுக்குள் கொண்டு வந்து ஒரு தனிக்கட்சியாக உருவாக்க முடியாது போய்விட்டது?.

எனவே அடித்தளம் என்பதன் பொருள் என்பதைப் புரியாது அவர் அக்கணத்தில் பேசியிருக்கின்றார் என்றே எண்ணத் தோன்றுகின்றது.

உண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அடித்தளம் என்பதை நாம் அனைவரும் அறிவோம். நான் ஏற்கனவே சொன்னது போல ஐந்து வெவ்வேறான சிந்தனைகளுள்ள கட்சிகளை, தாமாகவே ஒற்றுமைப்பட பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளுக்காக காத்திருக்கும் ஐந்து அமைப்புக்களை ஒற்றுமைப்பட வைத்த அதீத சக்தி எது என்றால் அது தமிழ் மக்கள் தான்.

அம் மக்களிற் பெரும்பாலானோர் ஆதரித்த ஆயுத அமைப்பின் விடாமுயற்சியாலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவவானது. அவ் உருவாக்கத்திற்காகப் பாடுபட்டவர்களி ஒருவர் கடத்திக் கொல்லப்பட்ட தராக்கி என்று அழைக்கப்படும் மாமனிதர் தர்மரட்ணம் சிவராம் அவர்களும் என அண்மையில் இணையத்தளம் ஒன்றின் ஊடாக அறியக் கிடைத்தது.

அத்துடன் அடித்தளம் என்பது தமிழ் மக்கள் தான் என்பதை மற்றோர் நிகழ்வொன்றின் ஊடாகப் புரிந்து கொள்ள முடியும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து விலகி தனிக்கட்சி ஆரம்பித்தவர்களை அரசியலில் தமிழ் மக்கள் ஒதுக்கியே வைத்திருக் கின்றார்கள். எனவே தமிழ்த் தேசியக் 4ட்டமைப்பின் அடித்தளம் தமிழ் மக்கள் தான் என்பதும் யாரெல்லாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து விலகிச் செல்கின்றார்களோ அவர்கள் யாவரும அரசியலில் இனி அனாதையாய்ப் போய்விடுவார்கள் என்பதே உண்மை.

எனவே இந்த ஐந்து அமைப்புக்களையும் ஒன்றிணைப்பதற்காக மேற்கொள்ளப்படும் ஆரம்பக்கட்ட முயற்சிகள் யாவும் எதிர்பார்த்த இலக்கினை உடனடியாக அடையப் போவதில்லை. ஆனால் அதற்கான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டன என்பது மிகப் பெரிய ஆறுதலே.

அத்துடன் இற்றைவரை தமிழரின் அரசியல் தீர்வு எது என்பதை எவரும் வரையறுக்க முடியாமலிருந்ததால் அதனை அடைவதற்கான செயற்பாடுகளைக் கட்டியெழுப்ப முடியாதிருந்தது. தற்போது அரசியல் தீர்வொன்றின் மாதிரியை வரைய முற்பட்ட செயற்பாடானது எதிர்காலத்தில் ஒரு முடிவை உருவாக்கும் முதற்படியாக அமைந்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடையே குழப்பம் உருவாகிவிட்டது என்ற மாயையை வடமாகாணத் தேர்தல் களத்தில் உருவாக்கிவிட யாரும் மேற்போந்த மூன்று விடயங்களையும் தமது கையில் எடுத்துக் கொள்ளலாம். ஆனால் அம்



மூன்றும் சாதக சமிக்ஞைகளே என்பதைத் தமிழுர் புரிந்துகொள்ள வேண்டும்.

இதுதான் தீர்வு என்ற முடிவுடன் ஒரேயொரு தமிழ்க் கட்சி எதிர்காலத்தில் உருவாகிவிடும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தடைகளைத் தாண்டும்.

சிந்திக்க வேண்டியது ஒன்றுதான். எப்போது என்பதே அது?

காற்றுத் திசை மாறிக்கிடக்கின்றது... தூற்றுவது எப்போது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாமரையை உடுத்திய பகல்

தாமரையை உடுத்திப்
படுத்திருந்த பகலில்
நீள் நகங்களால் வறாண்டி
சபைக் கூச்சத்தில்
முத்தம் உடைத்தவள்
நீயாகத் தானிருக்கும்
நிச்சயமாக...,
மௌனத்தை
மதுபானமாய் நிரப்பி
இல்லாத மொழியில்
வசனம் அமைத்து
உன் பூஜையறையில்
எனைப் பூக்களாய்
அடுக்கினேன்
நிலாப் பொந்துகளில்
இரவு பதுங்குகிற
ஒரு நாளில்...!!

## யாரோ எழுதிய சொல்

தடிப்பு மண்ணில்
தயாரிக்கப்பட்ட
திண்மப் பொருளாய் கிடக்கிறது
மனசு,
வாழ்க்கையைப் பிதுக்கி
கோழைத்தனத்தை
வெளியேற்ற
நிகழ்கின்ற முயற்சியில்
புண் விழுகிறது
சும்மா வீசுகிற காற்றில்
யாரோ எழுதி விடுகிறார்கள்
எனக்குப் பின்னாலும்
ஒரு பெண் வேண்டுமாம்
நான் ஜெயிக்க...

## இளநீக் காலங்கள்

எனதூர்
மண்சாலையில்
சப்பாத்து அணிந்த கால்களால்
சில நேரம்
நடந்து போவாள்
என் கோடையைத்
தூக்கி நிமிர்த்துகிற
இளநீர்க் காலமாய்...
இனியென் மனக்கண்ணில்
ஓர் அழகிய வழக்குப்
பதிவாகும்
என் தூக்கம் கலைத்தவள் என

அ.ச. பாய்வா
மூதூர்

## 3 ஆண்டுகளின் பின்..

படமொன்றில் மூன்று வருடங்களுக்கு முன் பயணப்பட்ட தனது மகனினும் உள்ளதாக தாயார் ஒருவர் உறுதிப்படுத்தியதைத் தொடர்ந்தே இப் பயணத்தில் ஈடுபட்ட அனைவரும் கரைசேர்ந்திருக்கலாம் என்னும் நம்பிக்கை கீற்று தோன்றியுள்ளது.

ஏப்ரல் மாத ஆரம்பத்தில் சுமார் 66 சட்டவிரோதப் பயணிகளுடன் பேர்த் நகரின் வடபுறமாக 400 கிலோமீற்றர் தொலைவிலுள்ள ஜெரால்டன் துறைமுகத்தை இப் படகு சென்றடைந்துள்ளது.

ஜெரால்டன் துறையைச் சென்றடைந்த முதலாவது படகு இதுதான். சட்டவிரோதப் பயணிகளுடன் செல்லும் படகுகள் கிறிஸ்மஸ் தீவையே பொதுவாக சென்றடைவது வழக்கம். ஆனால் இப் படகு கிறிஸ்மஸ் தீவிலிருந்து சுமார் 2000 கிலோமீற்றருக்கு அப்பலுள்ள வர்த்தகத் துறைமுகமான ஜெரால்டனை சென்றடைந்திருந்தது.

சுமார் 66 பயணிகளுடன் ஆறு வாரங்கள் கடலில் பயணித்த படகு சுமார் 5000 கிலோமீற்றர் கடந்தே இத்துறையை அடைந்துள்ளது.

## தமிழ்த்தின விழாவில்..

இப் போட்டிகளில் நான்கு முதலிடங்களை திருமலை மாவட்டம் பெற்றுக்கொண்டுள்ளது. அவற்றுள் 3ம் பிரிவின் பாஓதலில் முதலிடத்தை செல்வன் விஹ்ராஜும் (இந்துக் கல்லூரி), 5ம் பிரிவின் பேச்சுப் போட்டியில் முதலிடத்தை செல்வன் நாகார்ஜுனும் (இந்துக் கல்லூரி) பெற்றதுடன் 5ம் பிரிவில் தனியிசையின் முதலிடத்தை செல்வி நிசாந்தினியும் (சண்முகா மகளிர் கல்லூரி), குழு இசையின் 2ம் பிரிவில் முதலாம் இடத்தை சண்முகா மகளிர் கல்லூரியின் குழுவும் வென்றுள்ளது.

மேலும் பெருந்தெரு விக்னேஸ்வரா மகா வித்தியாலயம் 4ம் பிரிவுப் பாஓதல், நாட்டுக்கூத்து ஆகியவற்றில் இரண்டாம் இடத்தையும் 5ம் பிரிவில் பாஓதல், வில்லிசை, இசையும் அசைவும் ஆகியவற்றில் மூன்றாம் இடங்களையும் பெற்றுள்ளது.

## கிழக்கின் தமிழ்த்தின..

உபசரிப்பு ஆகிய முத்துறைகளிலும் மிகச் சிறப்பான கூட்டிணைவுடன் இவ் விழா நடாத்தி முடிக்கப்பட்டதென பலரும் தமது கருத்துக்களை மலைமுரசிற்குத் தெரியப்படுத்தியுள்ளனர்.

மாகாண கல்வி அமைச்சின் அனுசரணையுடன் வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. விஜயானந்த மூர்த்தியின் தலைமையில் சேனையூர் மத்திய கல்லூரியின் அதிபர் திரு இரத்தினசிங்கம் உட்பட வலய அதிபர்களும் அவரது ஆசிரியர் குழாமும் மற்றும் மூதூர் வலய மக்களும் இணைந்து தமிழ்விழாவை ஒரு திருவிழாவாக நடாத்திக் காட்டி கிழக்கில் மீண்டும் மூதூரை தலைநிமிரச் செய்துள்ளனர்.

## பொது வைத்தியசாலையில்..

திருகோணமலைப் பொது வைத்தியசாலையில் உலக 'தாதியர் தினக் கொண்டாட்டங்களின் போது உலகப் புகழ் வாய்ந்த "விளக்கேந்திய பெருமாட்டி" புளோரன்ஸ் நைட்டிங்கேள் அவர்களின் சிலையொன்று நினைவுப் பரிசாகப் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. திருமலைப் பொது வைத்தியசாலையில் பணியாற்றி தற்போது கனடாவில் பணியாற்றும் தாதியான திருமதி இ. இளங்கோவன் என்பவரால் இச் சிலை அன்பளிப்பாக வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## கிழக்கு மாகாண..

ஆளுங்கட்சியின் மாகாண சபை உறுப்பினர் தேசிய விடயங்களை மாகாண சபையில் பேசுவதையிட்டு தனது ஆட்சேபனையை வெளிப்படுத்தியிருந்தார். இதனைத் தொடர்ந்து குறுக்கும் மறுக்குமான வாதப் பிரதிவாதங்கள் மாகாண சபையின் ஆளும் மற்றும் எதிர்க்கட்சியினரிடையே பரிமாறப்பட மதிய உணவிற்காக மாகாண சபை கலைந்தது. மதிய உணவின் பின் மாகாண சபை மீண்டும் கூடிய கனத்தில் 13ம் திருத்தப்படி தனக்கிருக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தி காரணம் ஏதும் கூறாமல் சபைத் தவிசாளரால் மாகாண சபை அமர்வு ஒத்திவைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மாகாண சபையின் 12 எதிர்க்கட்சி உறுப்பினரும் மாகாண சபை வாயிலில் ஒரு மணிநேர எதிர்ப்பார்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அதன்போது கருத்தறைந்த எதிர்க்கட்சித் தலைவர் திரு. தண்டாயுதபாணி "காரணம் எதுவும் கூறாமல் சபையை ஒத்தி வைத்தது தலைவியின் பொறுப்பற்ற செயல்" எனத் தனது கண்டனத்தைத் தெரிவித்தார். மேலும் மதிய உணவு இடைவேளையின் பின் மின்சாரக் கட்டண உயர்வுக்கு எதிரான பிரேரணை ஒன்றை சபையில் கொண்டுவரத் தாம் திட்டமிட்டிருந்ததாகவும் அவ் விடயம் கைகூடவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

## ஒத்திவைக்கப்பட்ட தமிழ்த்தினப் போட்டிகள் – இன்னல்பட்ட பாடசாலை சமூகம்

தமிழ்மொழித்தினப் போட்டிகள் ஒரு நாள் பின்போடப்பட்டதால் மாணவர்களும் ஆசிரியர்களும் கடும் இன்னல்களை எதிர்கொண்டுள்ளனர். கடந்த 18ம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்த தமிழ்த்தினப் போட்டிகளை ஒத்திவைக்கும் அறிவிப்பை 17ம் திகதி இரவே கல்வித் திணைக்களம் வெளியிட்டது.

18ம் திகதி போர் வெற்றி விழா என்பதாலேயே இந்த ஒத்திவைப்பு நிகழ்ந்துள்ளது. கடந்த மூன்று வருடங்களாக இவ்வாறானதொரு சூழ்நிலையே அத் திகதியில் இருப்பதைக் கருத்திற்கொள்ளாமல் கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் மேற்கொண்ட இவ் ஏற்பாட்டால் 17ம் திகதியே சேனையூரை வந்தடைந்திருந்த பல தூரதேசப் பாடசாலைகளின் மாணவர்களும் ஆசிரியர்களும் கடும் திண்டாட்டத்தை எதிர்கொண்டிருந்தனர்.

போக்குவரத்து வசதிக்காக செலுத்தப்பட்ட முற்பணத்தை மீளப் பெற்றுக்கொள்ள முடியாது நகரப் பாடசாலையொன்று அல்லற்பட்டதாகவும் அறியமுடிகின்றது.

# மா ஆலை பாரத் தொழிலாளர்கள் "ஒரு நாள் பணிப்புறக்கணிப்பு"

திருகோணமலையின் மா ஆலையான பிறிமா சிலோன் லிமிடெட்டின் பாரந்தூக்கும் தொழிலாளர்கள் 21ம் திகதி ஒரு நாள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இப் பணிப்புறக்கணிப்பில் சுமார் 700 தொழிலாளர்கள் ஈடுபட்டிருந்ததாக நம்பகமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

மின் கட்டண உயர்வுக்கு எதிராக நாடெங்கும் நிகழும் ஜே.வி.பி யின் பணிப்புறக்கணிப்பின் ஓர் அங்கமாகவே இங்கும் பணிப்புறக்கணிப்பில் அவர்கள் ஈடுபட்டிருந்தனர். இப் பணிப்புறக்கணிப்பால் மா ஏற்றியிறக்கும் பணிகள் முற்றாகத் தடைப்பட்டிருந்தன.



# மசாஜ் நிலையங்களுடன் அல்லற்படும் அலஸ்தோட்ட மக்கள்

அலஸ்தோட்டப் பகுதியில் மசாஜ் நிலையம் எனும் பெயரில் இயங்கிய விடுதி வேறு தேவைகளுக்காக பயன்பட்டதென பிரதேசவாசிகள் குறித்த கட்டிடத்தினுள் அத்துமீறி நுளைந்து அவ்விடுதியிலிருந்த சிலரை காவல் துறையினரிடம் ஒப்படைத்திருந்தமை ஊடகங்களினூடாக வெளியாகி இருந்தது.

இதைத் தொடர்ந்து கடந்த திங்கட்கிழமை அப்பிரச்சினையுடன் சம்பந்தப்பட்ட ஐவரை அழைத்து இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை நடத்தினர். இவ் விசாரணையின்போது குறித்த பிரச்சினை தொடர்பாக இனந்தெரியாதோரால் பிரதேசவாசிகள் சிலருக்கு அனுப்பப்பட்ட கடிதங்கள் பற்றி விசாரிக்கப்பட்டதாக பிரதேசவாசிகள் மலைமுரசிற்கு தெரிவித்தனர்.

மேலும் இப்பிரச்சினைக்கு தீர்வாக கடந்த வாரம் "குறித்த பிரதேசத்திலுள்ள மசாஜ் நிலையங்கள் எதுவும் மாலை 5.30க்கு பிறகு இயங்கக் கூடாது எனவும் மசாஜ் நிலைய ஊழியர்கள் யாரும் மசாஜ் நிலைய விடுதியினுள் இரவில் தங்கக் கூடாது" எனவும் தெரிவிக்கப்பட்டதோடு "இனி வரும் காலங்களில் இப் பகுதியில் புதிதாக மசாஜ் நிலையங்களை ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது" என்றும் உப்புவெளி பிரதேச சபை குறிப்பிட்டிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஜப்பானிய போர்க் கப்பல்கள் திருமலையில்

கடந்த வாரம் திருமலை கடற்படைத் தளத்திற்கு பாகிஸ்தானிய போர்க் கப்பலொன்று நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது. அதைத் தொடர்ந்து ஜப்பானிய கடலோட தற்பாதுகாப்பு படைப்பிரிவின் இரு போர்க் கப்பல்களான சுசனாமி, கிரிசமி ஆகியன திருமலை தளத்திற்கு நல்லெண்ண வருகையை மேற்கொண்டுள்ளன. 20.05.2013 அன்று வருகை தந்திருந்த இக்கப்பல்களை இலங்கையின் கடற்படை வரவேற்றுள்ளது.

சுசனாமி கப்பலில் உலங்கு வானூர்தி ஒன்றும் மற்றைய கப்பலில் உலங்கு வானூர்திகள் இரண்டும் இறங்கும் வசதியைக் கொண்டன.

## தாக்குதலுக்குள்ளாயினர் மூன்று பொலிஸ் அதிகாரிகள்

மது போதையில் இருந்த ஒருவரின் தாக்குதலுக்கு உள்ளான மூன்று பொலிஸ் அதிகாரிகள் மூதூர் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் இரவு 9.15 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது மூதூர் தள வைத்தியசாலையில் தமது அலுவலகத்தில் இரவு உணவை உட்கொள்வதற்கு தயாராகிக் கொண்டிருந்த போது அங்கு மதுபோதையில் வந்த ஒருவர், பொலிஸ் அதிகாரிகளை நோக்கி திடீரென பாய்ந்து கடுமையாகத் தாக்கியுள்ளார்.

தாக்குதலுக்குள்ளான ஒரு அதிகாரி மயங்கி கீழே விழுந்ததும் தாக்குதலை நடத்திய குறித்த நபர் ஓடுவதற்கு முனைந்த போது ஏனைய இரு அதிகாரிகள் அவரை மடக்கிப் பிடித்துள்ளனர்.

பொலிஸார் மீது தாக்குதலை நடத்திய குறித்த நபர் இதற்கு முன்பும் இவ்வாறு பொலிஸாரை தாக்கியுள்ளதாக தெரிய வருகிறது. இத்தாக்குதல் சம்பவம் பற்றி மூதூர் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

# 22.1 படைத் தலைமையகத்தில் வெற்றி விழா


திருமலையின் இராணுவத் தலைமையகமான 22.1 பரிகேட் படைத்தலைமையகத்தில் இராணுவ வெற்றிவிழா நிகழ்வுகள் நடந்தேறியுள்ளன. படை அணிவகுப்பு உட்பட கலை நிகழ்வுகளும் படை வீரர்களால் நிகழ்த்தப்பட்டன. போரில் மரணித்த இராணுவ வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் போரில் அங்கவீனமான படை வீரர்களுக்கு உதவிகளும் வழங்கப்பட்டன.

இவ் வெற்றிவிழாக் கொண்டாட்டங்களுக்கு கிழக்கின் ஆளுணர் ரியர் அட்மிரல் மொகான், மாவட்ட செயலாளர் மேஜர் ஜெனரல் ரி.ரி.ஆர். டீ சில்வா மற்றும் 22.1 பிரிகேட் படைத் தளபதி எஸ்.பி. செனவிரட்ண ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

இராணுவ, வான்படை, கடற்படை, காவல்துறை மற்றும் ஊர்காவல் படையினர் ஆகியோர் இவ் வெற்றி விழா கொண்டாட்டங்களில் பங்கேற்றிருந்தனர்.

## கிளப்பன்பேர்க் படைத்தளத்திலிருந்து பயிற்சி பெற்ற படையினர் வெளியேற்றம்

சீனன்குடா கிளப்பன்பேர்க் படைத்தளப் பயிற்சி முகாமிலிருந்து ஆர்மட்கோ படைப்பிரிவின் 17வது பரிவு பயிற்சிகளை முடித்துக்கொண்டு வெளியேறியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அறிந்துகொள்ளுங்கள்

### புவி

புவி, ஞாயிறு மற்றும் நிலா உட்பட பரவெளியில், உள்ள மற்ற பொருட்களுடன் ஊடாடுகிறது. தற்போது புவி தனது அச்சில் சுழல்வதோடு தோராயமாக 366.26 முறை கதிரவனையும் சுற்றி வருகிறன்றது. இதற்கான மொத்த கால அளவு ஒரு விண்மீன் ஆண்டு (sidereal year), இது 365.26 சூரிய நாட்களுக்குச் (solar day) சமம். புவியின் அச்சு சுழற்சி அதன் கோளப் பாதையிலிருந்து, 23.4 பாகை செங்குத்தாக விலகி சாய்ந்து இருப்பதால், கோளின் மேற்பரப்பில் கால மாறுபாடுகளை ஒரு வெப்ப ஆண்டுக்கு (tropical year) தோற்றுவிக்கிறது (365.24 சூரிய நாட்கள்). புவியின் நாமறிந்த ஒரே இயற்கையான செயற்கைகோள் நிலா, 4.53 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பிருந்து அதனை சுற்ற ஆரம்பித்தது, இது கடலில் அலைகளை உருவாக்குவதோடு, புவியின் அச்சு சாய்வை நிலைப்படுத்தி, அதன் சுழற்ச்சியையும் சிறிது சிறிதாக குறைக்கிறது. தோராயமாக 4.1 மற்றும் 3.8 பில்லியன் ஆண்டுகளுக்கும் இடையே காலம் தாழ்ந்த பலத்த தாக்குதல் (Late Heavy Bombardment) நடந்த வேளையில் பெரு விண்கற்கள் (asteroid) தாக்கம் புவியின் சுற்று சூழலில் குறிப்பிடத்தக்க மாறுதலை ஏற்படுத்தியது.

புவியின் கனிம வளங்கள் மற்றும் உயிர்க் கோளத்தில் உருவான பொருட்கள் இரண்டுமாக உலக மக்கள் தொகை பெருக்கத்திற்கு துணை புரியும் வகையில் வளங்-களை அளித்தது. அங்கு வாழ்-பவர்கள் 200 தனித்த ஏகாதிபத்திய நாடுகளாக குழுவாக்கப்பட்டு, அரசியல், பயணம், வணிகம் மற்றும் இராணுவ செயல்பாடுகள் மூலமாக தொடர்பு கொண்டனர்.



தெய்வ வழிபாடு உட்பட, தட்டையான புவி அல்லது அண்டத்தின் மையத்தில் புவி உள்ளது போன்ற நம்பிக்கைகள், நவீன உலகப்பார்வையில் ஒருமைப்பாட்டுடன் ஒருவருக்கொருவர் உதவி புரிந்து வாழும் இடம் என மக்கள் கலாச்சாரம் இக்-கோளை பற்றி பல்வேறு விதமான தோற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

காலவரிசை :

அறிவியல் அறிஞர்கள் புவியின் கடந்த கால வரலாற்றை பற்றி விரிவாக வரையறுத்துள்ளனர். சூரிய மண்டலத்தில் காணப்படும் மிகப் பழமையான பொருள் 4.5672 ± 0.0006 பில்லியன் வருடங்களுக்கு முந்தியது. கடந்த 4.54 பில்லியன் வருடங்களுக்குள் (1% ஐயப்பாட்டுடன்) பரிதி உருவாகி, எஞ்சிய வாயு மற்றும் தூசுப்பொருட்-களால் ஆகிய தட்டு வடிவத்தில் இருந்த சூரிய நெபுலாவிலிருந்து புவி மற்றும் மற்ற கோள்கள் தோன்றின. இவ்வாறு இயற்கையான சேர்மானத்தால் 10–20 மில்லியன் வருடங்களுக்குள் புவியின் பெரும்பான்மையான பகுதி உருவாகியது. வளிமண்டலத்தில் நீர் சேர ஆரம்பித்தவுடன் முதலில் உருகிய நிலையில் இருந்த புவியின் மேற்பரப்பு குளிர்ந்து இறுகத் தொடங்கியது. இதற்குப்பின் புவியின் இயற்கை துணைக்கோள் நிலா உருவானது.

(தொடரும்.)


## அறிவுள்ள மந்திரி

கிருஷ்ண தேவராயர் எனும் அரசர் ஆட்சி செய்த ஓர் நாட்டின் மந்திரி அப்பாஜி எனபவர் ஆகும். அப்பாஜி மிகுந்த அறிவும் புத்திக் கூர்மையும் உள்ளவர். அவரிடம் அரசருக்கு அதிக மதிப்பும் அன்பும் இருந்தது. அரசருக்குப் பல உறவினர்கள் இருந்தனர். அவர்களில் பலர் அறிவில்லாதவர்களாக இருந்தனர். அவர்களில் அரசியின் தம்பியும் ஒருவன். அரசிக்குத் தன் தம்பி மந்திரியாக வேண்டுமென்று மிகவும் விருப்பம். ஒரு நாள் அரசர் தனியாகத் தோட்டத்தில் தன் கைக்குழந்தையுடன் விளையாடிக் கொண்டிருந்தார். அரசியும் உடன் இருந்தாள். அப்போது அரசி, அரசரிடம் "எனது தம்பியும் புத்திசாலிதானே! அவனை ஏன் மந்திரியாக்கக் கூடாது?" எனக் கேட்டாள். அரசர் அதற்கு பதில் எதுவும் கூறாமல் குழந்தையைக் கொஞ்சிக் கொண்டிருந்தார். குழந்தை தனது இளங்கால்களால் அவரது மார்பில் உதைத்து விளையாடியது. சிறிது நேரம் கழித்து அப்பாஜியும் அரசியின் தம்பியும் அரசரைக் காண அங்கு வந்தனர். அரசர் ஒருவர் பின் ஒருவராய் அவர்களைச் சந்தித்துப் பேசினார். முதலில் அங்கு வந்த அரசியின் தம்பியிடம், "எனது மார்பில் உதைத்தவனுக்கு என்ன தண்டனை விதிப்பது?" எனக் கேட்டார். அவனும் சிறிதும் யோசிக்காமல் உடனே, "அக்கால்களை வெட்டுவதுதான் அவனுக்குத் தண்டனை" என்றான். பிறகு அரசர் அப்பாஜியை அழைத்து அவரிடம் அதே கேள்வியைக் கேட்டார். அதற்கு அப்பாஜி சிரித்துக் கொண்டே, "அரசரது மார்பில் யார் உதைக்க முடியும்? தங்கள் குழந்தைக்குத் தான் அவ்வுரிமையுண்டு. அதன் இளங்கால்களுக்கு பொன்காப்பிட்டு, அதை முத்தமிடுவதே அதற்குத் தகுந்த தண்டனை" எனக் கூறினார். அப்பாஜியும் அரசியின் தம்பியும் அங்கிருந்து சென்றனர். பிறகு அரசியிடம் அரசர், "என்ன சொல்கிறாய்? உன் தம்பி கூறியபடி நமது குழந்தையின் கால்களை வெட்டுவோமா? அல்லது அப்பாஜி கூறியபடி அதற்குப் பொன் காப்புகள் அணிவித்து முத்தமிடுவோமா?" எனக் கேட்டார். அரசியும் மிக வருத்தத்துடன் தலை குனிந்து பதில் கூறாமல் நின்றாள்.

## அனைத்துலக ஆண்டுகள்

- 2000 - நன்றி தெரிவித்தல் ஆண்டு
- 2000 - அமைதிப் பண்பாடு ஆண்டு
- 1999 - மூத்தோர் ஆண்டு
- 1998 - பெருங்கடல் ஆண்டு
- 1996 - வறுமை ஒழிப்பு ஆண்டு
- 1995 - சகிப்புத்தன்மை ஆண்டு
- 1995 - இரண்டாம் உலகப்போரில் பாதிக்கப்பட்டோரை மக்கள் நினைவுகூர்வதற்கான அனைத்துலக ஆண்டு
- 1994 - அனைத்துலகக் குடும்பம்
- 1994 - விளையாட்டுக்கும் ஒலிம்பிய இலட்சியத்துக்குமான ஆண்டு
- 1993- உலகத் தாயக மக்களுக்கானது
- 1991 - விண்வெளி ஆண்டு
- 1990 - எழுத்தறிவு ஆண்டு
- 1987 - வீடற்றோருக்கு வீடு பெறுவதற்கான அனைத்துலக ஆண்டு
- 1986 - அமைதிக்கான ஆண்டு
- 1985 - ஐக்கிய நாடுகள் ஆண்டு
- 1985 - இளைஞர், பங்கேற்பு, வளர்ச்சி, அமைதிக்கான ஆண்டு
- 1983 - தொலைத்தொடர்பு ஆண்டு
- 1982 - தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான தடைகளுக்கான வளத்திரட்டலுக்கானது
- 1981 - ஊனமுற்றோருக்கான அனைத்துலக ஆண்டு

(தொடரும்.)




## கர்ப்பக காலத்தில் ஏற்படும் முகப்பரு!

இளம் வயதில் முகப்பரு பலரையும் வாட்டி வதைக்கும். கர்ப்ப காலத்தில் முகப்பரு வந்தால் அதற்கு சிகிச்சை செய்வது எப்படி என்பது பலரது கேள்வி. கர்ப்பம் தொடங்கும் முன்பாகவே பல பெண்களும் முகப்பருவிற்காக சிகிச்சை செய்திருப்பார்கள் கர்ப்ப காலத்தில் மேற்கொள்ள வேண்டிய முகப்பரு சிகிச்சைகள் குறித்து ஆலோசனைகள் கூறுகின்றனர் மகப்பேறு மருத்துவர்கள். மகப்பேறு காலத்தில் ஓய்வாக இருங்கள். கர்ப காலத்தில் கர்ப்பிணிகளுக்கு பதட்டம் அதிகரிக்கும். மன அழுத்தமும் ஏற்படும் இதுவே பருக்கள் தோன்றக் காரணமாகின்றது. எனவே மன அழுத்தத்தைக் குறைக்க தியானம், யோகா மேற்கொள்ள வேண்டும். மூச்சுப்பயிற்சி செய்தாலும் மன அழுத்தம் குறையும். ஊட்டச்சத்துமிக்க உணவுகளை உண்ணவேண்டும். சரிவிகித ஊட்டச்சத்து உண்ணாவிட்டாலும் பரு ஏற்படும். எண்ணெய்ப் பலகாரம் அதிகம் சாப்பிடுவதால் கொழுப்பு அதிகமாகி பருக்கள் தோன்ற வாய்ப்புள்ளது. இக்காலத்தில் பழங்கள், காய்கறிகள் அதிகம் கொண்ட ஊட்டச்சத்து உணவுகளை உட்கொள்ள வேண்டும். அடிக்கடி முகத்தைக் கழுவுங்கள். கர்ப்பக காலத்தில் சுரப்பிகள் சுரக்கும் அளவு அதிகரிக்கும் இதனால் கூட முகத்தில் பருக்கள் உருவாகலாம். சுத்தமாக்கி (க்ளென்சிங்) கொண்டு தினசரி இரண்டு முறை முகத்தைக் கழுவுவது நல்ல பலனைக் கொடுக்கம். அத்துடன் தேன் பாவிக்கலாம். பரு உள்ள இடத்தில் தேனைத் தடவி 15 நிமிடம் ஊறவைத்து வெது வெதுப்பான தண்ணீரால் கழுவினால் பருக்கள் படிப்படியாக குறையும். ஆரம்ப காலத்தில் கண்ட கண்ட கிறீம்களைப் பயன்படுத்துவதால் கருச்சிதைவு, குறைப்பிரசவம் உடலில் பிறவிக் கோளாறுகள் தோன்றலாம் என்று கருதப்படுகின்றது. எனவே கரிப்பிணிப் பெண்கள் வைத்திய ஆலோசனையுடன் கிறீம்களைப் பாவிப்பது நல்லது.

## ஆரோக்கியம் தரும் தக்காளி

இரத்தத்தைச் சுத்தப்படுத்தவும், இரத்த சோகையைக் குணமாகவும் தக்காளி பயன்படுகிறது. சிறுநீரகத்தில் உள்ள கழிவுப் பொருள்கள் அனைத்தும் வெளியேறவும் இது பயன்படுகிறது. விஷப் பொருள்கள் இருந்தாலும் அவற்றையும் வெளியேற்றிச் சிறுநீரகங்களை புதுப்பித்துத் தருகிறது தக்காளி இரசம். நன்கு பழுத்த தக்காளிப் பழத்தையே சாறாக மாற்றி உடனே அருந்த வேண்டும். பழுத்த பழத்தில் தான் நோய்த்தடுப்பு விட்டமின் சீ அதிகமாய் இருக்கிறது. சிறு நீர் எரிச்சல், மேக நோய், உடலில் வீக்கம், உடல் பருமன், நீரிழிவு, குடல் கோளாறுகள், கல்லீரல் கோளாறுகள் முதலியவை குணமாகவும் தக்காளிச் சாறு சிறந்தது. மேற்குறித்த நோய் உள்ளவர்கள் 5-6 பழங்களைச் சிறிது தண்ணீர் விட்டு மிக்ஸி மூலம் சாறாக மாற்றி



அருந்தினால் நாக்கு வறட்சி நீங்கும் அத்துடன் உடலும் மினுமினுப்பாய் மாறும். 100 கிராம் தக்காளிப் பழத்தில் கிடைக்கும் கலோரி 20. எனவே எவ்வளவு சாப்பிட்டாலும் உடல் பருமன் அதிகரிக்காது. பழத்தில் கல்சியம், பொஸ்பரஸ், விட்டமின் ஏ முதலியவை அதிக அளவில் உள்ளன. இதனால் உடலுக்குச் சத்துணவும் கிடைக்கும். உடல் பருமனைக் குறைக்க விரும்புவோர் காலை உணவாக பழுத்த இரு தக்காளிப் பழங்களைச் சாப்பிட்டால் போதும். தொடர்ந்து ஓரிரு மாதங்கள் இப்படிச் சாப்பிட்டால் கொழுத்த சரீரம் கட்டுப்படும். எடை கூடாது. காரணம் அதில் மாச்சத்து குறைவாய் இருப்பதுதான். அத்துடன் உடலுக்கு மேற்கொண்ட தாது உப்புக்களும், விட்டமின்களும் கிடைத்துவிடுகின்றன. இதனால் உடல் நலக்குறைவு ஏற்படாமல் உடல் பருமனைக் குறைக்கலாம். தக்காளி உடலில் உள்ள நோய்க் கிருமிகளை முற்றிலும் விரட்டக்கூடியது. நீரிழிவுக் காரர்களின் சிறுநீரில் சர்க்கரையின் அளவைக் கட்டுப்படுத்துகிறது. இரவு நேரத்தில் பார்வை சரியாகத் தெரியாதவர்கள் தக்காளிச் சாறு சாப்பிட வேண்டும்.

## ஹவாய் சோறு

*தேவையான பொருட்கள் :*

சம்பா அரிசி - 1 சுண்டு, இறைச்சி - அரை கி.கி, உள்ளி - 5 பல்லு, இஞ்சி - 1 துண்டு, வெங்காயம் - கால் கி.கி, கறி மிளகாய் - 4, தக்காளிப்பழம் - 2, வினாகிரி - 2மே.க, சோள மா - 1 மே.க, தண்ணீர் - அரை தம்ளர், ரம்பை - 3 துண்டு, கறிவேப்பிலை - அளவாக, மாஜரீன் - 50கி, சிறிதாக வெட்டிய அன்னாசிப் பழத்துண்டுகள் - 5 மே.க, உப்பு - அளவிற்கு, மிளகுத்தூள் - அளவிற்கு, சிலி சோஸ் - 1 தே.க

*செய்முறை :*

ஒரு சுண்டு அரிசியில் சோறு சமைத்து பாத்திரத்திலிட்டு பரவி ஆறவைத்துக் கொள்ளவும். இறைச்சிக்கு வினாகிரி இட்டு புரட்டி 1 மணி நேரத்திற்கு ஊற வைத்த பின்பு உப்பிட்டு அவித்துச் சிறு துண்டுகளாக வெட்டி அரைத்து சிலி சோஸ் விட்டுக் கலந்து கொள்ளவும். பின்னர் தக்காளிப்பழம், கறிமிளகாய், வெங்காயம் என்பவற்றைத் துப்பரவு செய்து கழுவிச் சிறு சிறு துண்டுகளாக வெட்டிக் கொள்ளவும். உள்ளி, இஞ்சி என்பவற்றை அரைத்தெடுத்துக் கொள்ளவும். தாச்சியை அடுப்பில் வைத்து மாஜரீனிட்டு உருகியதும் வெட்டிய வெங்காயம், கறிமிளகாய் என்பவற்றை இட்டு வதங்கவிடவும். அரைப்பதமாக வதங்கியவுடன் கறிவேப்பிலை, ரம்பை மற்றும் அரைத்து வைத்துள்ள உள்ளி, இஞ்சி மற்றும் வெட்டி வைத்துள்ள தக்காளிப்பழம், அன்னாசி என்பவற்றையிட்டு வதங்கியதும், அரைத்த இறைச்சியை இட்டு அதனுள் உப்புத்தூள், மிளகுத்தூள் என்பவற்றை அளவிற்குச் சேர்த்துக் கொண்ட பின்பு அரை தம்ளர் தண்ணீரில் கரைத்த சோள மா கரைசலை ஊற்றி நன்றாகக் கலந்து அதனுள் ஆறவைத்துள்ள சோற்றைக் கொட்டிச் சேர்த்து நன்றாகக் கிளறி இறக்கிக் கொள்ளவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த வார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதானபார்வை...

## The Sunday Times

### இறக்குமதி செய்யப்படும் வெள்ளைச் சீனியில் நச்சு இரசாயனப் பதார்த்தங்கள்

வெளிநாடுகளிலிருந்து இலங்கையின் தேவைகளுக்காக இறக்குமதி செய்யப்படும் வெள்ளைச் சீனியில் மனிதப்பாவனைக்கு ஒவ்வாத நச்சு இரசாயனப் பதார்த்தங்கள் கலந்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. பிரேசில் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட வெள்ளைச் சீனியின் மீது மேற்கொள்ளப்பட்ட எழுந்தமான பரிசோதனைகளின் முடிவில் கூடியளவு நச்சுப் பதார்த்தங்கள் கலந்திருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் தெரிவித்துள்ளார். ஆனால் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சீனியில் அவ்வாறான நச்சுக்கள் எவையும் இல்லை என தெரியவருகின்றது. மேலும் இறக்குமதி செய்யப்பட்ட பருப்பு, வெங்காயம், உருளைக்கிழங்கு போன்றவற்றின் மீது நடத்தப்பட்ட சோதனைகளில் அவை தேறிவிட்டதாக அவர் தெரிவித்தார். ஆரம்பகட்ட ஆய்வுகளின் போது இம்முடிவுகள் பெறப்பட்டதாகவும் மேலும் ஆழ்ந்த பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட இருப்பதாகவும் தெரியவருகின்றது. அப்பிள், தோடம்பழம் மற்றும் முந்திரிகைப்பழம் போன்றவற்றின் மீதும் சோதனைகள் நடத்தப்படவுள்ளது.

### இலங்கையைச் சீர்குலைக்கும் வெளிநாட்டுச் சக்திகள் — சனாதிபதி எச்சரிக்கை —

விடுதலைப்புலிகளை நிர்மூலமாக்கி நான்கு ஆண்டுகள் கடந்துள்ள போதிலும் வெளிநாட்டு சக்திகள் இலங்கையைச் சீர்குலைப்பதற்கான பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக இலங்கையின் சனாதிபதி தெரிவித்தார். விடுதலைப் புலிகளை வென்ற இராணுவ வெற்றியின் கொண்டாட்ட நாளில் பேசிய சனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார். காலிமுகத்திடலில் நிகழ்ந்த வெற்றிப் பேரணியில் வெளியக சக்திகள் மனித உரிமைகள், ஊடகச் சுதந்திரம், நீதித்துறைச் சுதந்திரம் போன்றவற்றால் இலங்கையை நிர்மூலமாக்கும் கிறீஸ் பூதங்களாக உருவாகி வருவதாக தெரிவித்தார். இதனடிப்படையில் ஆறு மாதங்களுக்கொருமுறை எமது முடிவுகளை நாமே அறிக்கையிடும் வண்ணம் பொறிமுறை ஒன்றை உருவாக்கி வைத்துள்ளதாக அதற்குச் சனநாயகம் மற்றும் மனித உரிமை என்ற வகையிலான அழுத்தங்களைப் பிரயோகிப்பதாகவும் தெரிவித்தார். 20 வருடங்களின் பின் வட மாகாணத்திலுள்ள மீனவர்களை அவர்களது கடற்பிரதேசங்களில் சுதந்திரமாக மீன்பிடிக்க அனுமதித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

### பொதுநலவாய தலைவர்களின் கூட்டத்தொடரில் — இலங்கையை காப்பாற்றியது மாலைதீவு

எதிர்வரும் நவம்பர் மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய தலைவர்களின் கூட்டத்தொடரை வேறு நாடுகளுக்கு மாற்றுவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு மாலைதீவு தனது கடும் எதிர்ப்பை தெரிவித்துள்ளது. இலங்கையில் 54 நாடுகளின் ஒப்பந்தச்சரத்துக்கள் மீறப்படுவதாக தெரிவித்து வரும் சில நாடுகள் தலைவர்களின் கூட்டத்தொடர் வேறு நாடுகளில் நடைபெற வேண்டும் என அழுத்தங்களைப் பிரயோகித்து வருவது குறிப்பிடத்தக்கது. அதற்கு முத்தாய்ப்பாக பொதுநலவாய அமைச்சர்கள் செயற்பாட்டுக் குழு கூட்டத்தில் இவ்விடயம் பற்றி ஆலோசிப்பதற்காக சில நாடுகள் முயற்சித்தன. ஆனால் பொதுநலவாய அமைச்சர்களின் மாநாட்டில் இவ் விடயத்தை பற்றிப் பேசுவதற்கு நேரம் ஒன்றை எடுப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளை மாலைதீவு கடுமையாக தடுத்ததாக இலங்கைக்கு குறுஞ்சுற்றுலா ஒன்றை மேற்கொண்டிருக்கும் அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சர் கலாநிதி அப்துல் சமாத் அப்துல்லா தெரிவித்துள்ளார். இலங்கைக்கெதிராக மேலும் புதிய முயற்சிகள் எடுக்கப்படுமா என்பது பற்றி தனக்குக் கூறமுடியாதுள்ளதாக தெரிவித்த அவர், ஆனால் அவ்வகை முயற்சிகள் வெற்றிபெறப் போவதில்லை எனடறு தெரிவித்தார்.

### வியன்னா தீர்மானத்திற்கு மதிப்பளியுங்கள் — இலங்கைக்கு சொல்கிறது நோர்வே

இராசதந்திர வரப்பிரசாதங்கள் தொடர்பாக முறையாக தீர்மானிக்கப்பட்டுள்ள சர்வதேச சட்ட விதிகளுக்கு ஒழுங்கி நடக்குமாறு இலங்கையை நோர்வே கேட்டுக்கொண்டுள்ளது. கொழும்பில் நீதிமன்றொன்றில் முன்னால் நோர்வேயின் தூதுவருக்கும் அவருடன் செயலாற்றிய மேலும் 3 அலுவலர்களுக்கெதிராக தன்னார்வ தொண்டு நிறுவன மில்லியன் கணக்கான நிதிக்கொடுக்கல் வாங்கல்களின் மீதுள்ள குற்றச்சாட்டின் முன் அவர்களது இராசதந்திர வரப்பிரசாதங்கள் செல்லுபடியாகாது என கடந்த வாரம் தீர்ப்பளிக்கப்பட்டதைத் தொடர்ந்தே நோர்வேய் வெளிவிவகார அமைச்சு இவ்வாறு தெரிவித்தது.

### இலங்கையின் ஆயுதப்படைக்கு எதிராக செயற்படுபவர்களுக்கு எதிராக சனாதிபதி குரல் கொடுப்பார்

ஆயுதப் படைகளுக்கெதிராக செயற்படுபவர்களை எதிர்த்து தான் தொடர்ந்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளப்போவதாக சனாதிபதி இராணுவ வெற்றிக் கொண்டாட்டங்களின் போது தெரிவித்தார். வெளிநாடுகளின் தலையீடு என்பது எமக்குப் புதிதல்ல என்று தெரிவித்ததுடன் பயங்கரவாதத்திற்கெதிரான போர் நிறைவுற்று நான்கு வருடங்களைக் கடந்துள்ள நிலையில் பல்வேறு விதமான சட்டங்களைப் பயன்படுத்தி இலங்கையை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர சர்வதேச நாடுகள் விரும்புகின்றது என அவர் தெரிவித்தார். வெளிப்படையாக அந்நாடுகள் சனநாயகத்தையும் மனிதஉரிமையையும் நிலைநாட்டப் பாடுபடுவதாக அந்நாடுகள் கூறுகின்ற போதும் அவற்றின் உள்நோக்கம் இலங்கையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதே என அவர் மேலும் தெரிவித்தார்.

### ஜே.வி.பி கொலையாளிகள் தண்டனையின்றித் தப்பிவிட்டார்கள்

89 மற்றும் 89ம் ஆண்டுகளில் ஜே.வி.பி யினரால் கொல்லப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்கள் ஜே.வி.பி யிற்கெதிரான சட்ட நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என கோரியுள்ளனர். இக்காலப்பகுதியில் கொலைஞர்களாக செயற்பட்டவர்கள் இன்று தண்டனைகள் ஏதுமின்றி வலம் வருகின்றனர். என்று அவர் தெரிவித்துள்ளார். அண்மையில் ஜே.வி.பியின் முன்னிலை உறுப்பினர் லா காந்தன் கூட்டமொன்றில் மின்மாற்றிகளைத் தகர்த்ததும், தேசிய அடையாள அட்டைகளை எரித்ததும் தாமே என தெரிவித்திருந்ததைத் தொடர்ந்து இக்கோரிக்கை வலுப்பெற்றது.

## The Sunday Observer

### விதவையையும் அவரது மகளையும் திருமணம் முடித்தவர் கைது

44 வயதான விதவையைத் திருமணம் முடித்தவர் அவரை விட்டுவிலகி அவ்விதவையின் 20 வயது மகளை திருமணம் முடித்த சம்பவம் அவிசாவலவில் நடைபெற்றது. குறித்த நபர் தனது தாயை மணம் முடித்தவர் எனத் தெரிந்து கொண்டே அவ்விள வயதுப் பெண் இவரை மணமுடித்திருந்தார் என்பது காவல்துறையின் முதல் விசாரணையில் தெரியவந்துள்ளது. தாயை மணம்முடித்திருந்த நிலையில் குறித்த நபர் அவ்விளவயதுப் பெண்ணுடனும் தொடர்பை வைத்திருந்தார் என தெரியவருகின்றது. அவ்விரு திருமணங்களும் முறையே 2009ம் ஆண்டிலும் 2012ம் ஆண்டிலும் நடந்துள்ளது.

### த.தே.கூ வின் பிளவு முனைப்புப் பெற்றுள்ளது

எதிர்வரும் செப்டம்பரில் நடைபெறவுள்ள வட மாகாய சபைத் தேர்தல்களுக்குமுன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனிக்கட்சிகளாக பிளவுபட்டுவிடும் முனைப்பு காணப்படுகிறது. இப்பிளவினை முதன்மைப்படுத்தி தமிழரசுக் கட்சி செயற்படுவதாகவும் ஈபிஆர்எல்எப், ஈரோஸ், டெலோ மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவை தனியாகப் பிரிந்து செல்லும் நிலை உள்ளதாகவும் தெரியவருகின்றது. எதிர்வரும் மாகாணசபைத் தேரிதலில் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கென்ற தனியான சின்னத்தில் போட்டியிடாமல் தமிழரசுக் கட்சியின் வீட்டுச்சின்னத்தில் த.தே.கூ போட்டியிட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தமிழரசுக் கட்சி உள்ளது.

### ஜெனிவாத் தீர்மானத்தின் பின்னரான இலங்கையின் நிலையை அவதானிக்கிறது அமெரிக்கா

ஜெனிவா மனிதவுரிமை ஆணைக்குழு இறுதிக் கூட்டத்தொடரில் பரிந்துரைக்கப்பட்ட விடயங்களின் இலங்கையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் தொடர்பாக தனது அவதானத்தை அமெரிக்கா செலுத்தி வருகின்றது. யாதாயினும் முன்னேற்றங்கள் உள்ளதா என்பதை அறியும் நோக்குடன் கடந்த வாரங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களுடன் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மிச்சேல் ஜே.சிசன் கலந்துரையாடியிருந்தார். தூதுவர் எம்மைச் சந்தித்து மனிதஉரிமை பரிந்துரைகளை அரசு நிறைவேற்றி வருகின்றதா என்பதை அறிவதற்காக தம்மைச் சந்தித்து பேசும் ஆவலைக் கொண்டிருந்தார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். இச்சந்திப்பின் போது வடக்கின் நிலச் சுவீகரிப்பு தொடர்பாக அமெரிக்க தூதுவருக்கு நாம் விளக்கமளித்ததுடன் இவ்வாறு பொதுமக்களின் காணிகள் இராணுவத் தேவைக்காக கைப்பற்றப்படுவது நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கைக்கு முற்றுமுழுதாக எதிரிடையானது என அவருக்கு மேலும் தாம் தெரிவித்ததாக எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

### இலங்கையில் பொதுநலவாயத் தலைவர்களின் கூட்டம் — கலந்துரையாடியது கனடாவும் பஹாமாசும்

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாத் தலைவர்களின் கூட்டத்தொடர் தொடர்பாக கனடாவும் பஹாமாசும் கலந்துரையாடல் ஒன்றை நிகழ்த்தியுள்ளன. பஹாமாசுக்கு வருகை தந்துள்ள கனேடிய வெளிவிவகாரங்களுக்குப் பொறுப்பான இராசாங்க அமைச்சருடன் தாம் இலங்கையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தொடர் தொடர்பாக கலந்துரையாடல் ஒன்றை நிகழ்த்தியுள்ளதாக பஹாமாசின் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார். கனடாவும் பஹாமாசும் நட்பு நாடுகள் என்பதுடன் 40 வருடங்களுக்கு முன் சுதந்திரமடைந்ததிலிருந்து கனடாவுடன் அந்நாடு இணைப்பினைக் கொண்டுள்ளது. கனடா இலங்கையிலிருந்து பொதுநலவாயத் தலைவர்களின் கூட்டத்தொடரை மற்றொரு நாட்டுக்கு மாற்றப்பட வேண்டும் என அழுத்திக் கொண்டுள்ளது. எனினும் பஹாமாசுடனான கலந்துரையாடலில் இவ்விடயம் பேசப்பட்டதா என்பதை அவ்விரு நாடும் தெரிவிக்கவில்லை.

### 13வது திருத்தச் சட்டத்தை பாதுகாக்க குழுவொன்று உருவாக்கம்

அரச பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட சுமார் 31 அங்கத்தவர்களுடன் 13வது திருத்தச் சட்டத்தை பாதுகாக்கும் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில் பல அமைச்சர்கள் உடன் இக்குழு உருவாக்கப்பட்டுள்ளது. 13வது திருத்தச் சட்டத்தினைப் பாதுகாத்து காணி மற்றும் காவல்துறை அதிகாரங்களை மாகாணங்களுக்கு பகிர்வதை உறுதிப்படுத்தும் செயற்பாட்டை இக்குழு மேற்கொள்ளவுள்ளது. வடமாகாணத் தேர்தல்களுக்கு முன் 13வது திருத்தச் சட்டம் ஊடாக மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள காணி மற்றும்

## The Leader

காவல்துறை அதிகாரங்களை பாராளுமன்றின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் இல்லாதொழிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதாக தெரியவருகின்றது. இவ்வாறு நடைபெறுமாயின் இக்குழு பாராளுமன்றில் அப்பிரேரணையின் மீது எதிர்த்து வாக்களிக்கும் நடவடிக்கையை மேற்கொள்ளும். அதன் அங்கத்தவர்களாக டியூ குணசேகர, திஸ்ஸ விதரன, ஜனக பண்டார தென்னகோன், றெஜினோல் குரே, மேவின் சில்வா, பீலிக்ஸ் பெரேரா மற்றும் ராஜித சேனாரத்ன ஆகியோர் இக்குழுவில் உள்ளனர். காணி மற்றும் காவல்துறை அதிகாரங்களை மாகாணசபைக்கு இல்லாதொழிக்க வேண்டும் என கடுமையான அழுத்தம் ஒன்றை அரசு எதிர்கொள்ளுமாயின் அதனை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க குழு ஒன்றை நியமிப்பேன் என சனாதிபதி உறுதியளித்திருப்பதாக அமைச்சர் திஸ்ஸ விதாரன தெரிவித்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பாடசாலைகளுக்கு இடையேயான மாகாண மட்ட கராத்தே போட்டிக்கு

## தம்பலகாமம் ஆதிகோணேஸ்வரா மகா வித்தியாலய மாணவர்கள் தெரிவு

கடந்த 16.05.2013 அன்று திருகோணமலை புனித மரியாள் கல்லூரியில் திருகோணமலை வலயப் பிரிவுக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு இடையேயான வலய மட்ட கராத்தே சுற்றுப்போட்டி நடைபெற்றது. இப் போட்டியில் தம்பலகாமம் ஆதி-கோணேஸ்வரா மகா வித்தியாலய மாணவர்களும் கலந்து கொண்டு தமது திறமைகளை வெளிக்காட்டி வெற்றி பெற்று பாடசாலைகளுக்கு இடையே-யான மாகாண மட்டக் கராத்தே போட்டிக்குத் தெரிவாகியுள்ளனர். ஆதிகோணேஸ்வரா மகாவித்தியாலய பொறுப்பாசிரியர் திரு.பாஸ்கரன் மற்றும் பிரதான நடுவர் திரு.ஆர்.சத்தியராஜன் ஆகியோருடன் வெற்றிபெற்ற மாணவர்களான க.லக்ஸ்ஸாந்தன், ஆர். டிலோஜன், எம்.நீருஜன் ஆகியோரைப் படத்தில் காணலாம். மேலும் இப்போட்டியில் திருமலை இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி, புனித சூசையப்பர் கல்லூரி, உவர்மலை விவேகானந்தாக் கல்லூரி, சண்முகா இந்து மகளீர் கல்லூரி மற்றும் புனித மரியாள் கல்லூரி மாணவ மாணவி-களும் கலந்து கொண்டு வெற்றிகளை பெற்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.



# திருகோணமலை வலய மட்ட விளையாட்டுப் போட்டி முடிவுகளில் சில

| போட்டி | வயது / பால் | முதலாம் இடம் | இரண்டாம் இடம் |
|---|---|---|---|
| பூப்பந்தாட்டம் | U19 ஆண் | ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி | உவர்மலை விவே-கானந்தா கல்லூரி |
| | U15 ஆண் | புனித சூசையப்பர் கல்லூரி | உவர்மலை விவே-கானந்தா கல்லூரி |
| | U19 பெண் | புனித மரியாள் கல்லூரி | உவர்மலை விவே-கானந்தா கல்லூரி |
| | U15 பெண் | உவர்மலை விவே-கானந்தா கல்லூரி | புனித மரியாள் கல்லூரி |
| எல்லே | U19 ஆண் | அபேபுர மகா வித்தியாலயம் | சிங்கள மத்திய மகா வித்தியாலயம் |
| | U19 பெண் | அபேபுர மகா வித்தியாலயம் | செல்வநாயகபுரம் இந்து மகா வித்தி.. |

# உயர்தர மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சை

## திருகோணமலை மாவட்டப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

திருகோணமலை மாவட்டப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்-தினால் வருடாவருடம் நடாத்தப்படும் உயர்தர மாணவர்களுக்கான முன்னோ-டிப் பரீட்சையானது 24.05.2013 ஆரம்பமாகியுள்ளது. இப் பரீட்சை தி/ இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் நடைபெறுவதுடன் 01.06.2013 வரை நடைபெறவுள்ள-தென்பதும் குறிப்பிடத்தக்கது.

| Date | Time | Subject |
|---|---|---|
| 24/05/2013 | 09.00 - 12.00 AM | MATHS - II<br>BIOLOGY - II |
| 24/05/2013 | 02.00 - 05.00 PM | ECONOMICS - II<br>HINDU CULTURE - II |
| 25/05/2013 | 09.00 - 12.00 AM<br>09.00 - 11.00 AM | MATHS - I<br>BIOLOGY - I |
| 25/05/2013 | 01.00 - 03.00 PM | ECONOMICS - I<br>HINDU CULTURE - I |
| 26/05/2013 | 09.00 - 12.00 AM | PHYSICS - II |
| 26/05/2013 | 02.00 - 05.00 PM | BUSINESS STUDIES - II<br>GEOGRAPHY - II |
| 27/05/2013 | 02.30 - 04.30 PM | PHYSICS - I |
| 28/05/2013 | 02.30 - 04.30 PM | BUSINESS STUDIES - I<br>GEOGRAPHY - I |
| 29/05/2013 | 02.30 - 05.30 PM | CHEMISTRY - II |
| 30/05/2013 | 02.30 - 05.30 PM | ACCOUNTING - II<br>TAMIL - II |
| 31/05/2013 | 02.30 - 04.30 PM | CHEMISTRY - I |
| 01/06/2013 | 09.00 - 11.00 AM | ACCOUNTING - I<br>TAMIL - I |






காவல்துறை மோப்ப நாயும் அந்த யன்னல் வரை சென்று தான் திரும்பியது......

மனைவியின் வீட்டின் பின்புறயாகச் சென்று கேதீஸ் கணணித் திரையில் தனது மனைவியுடன் உரையாடியுள்ளான். அதன் போது அவள் கேதீஸை மிக விரைவாக அவனது வீட்டிற்குச் சென்று கணணி அழைப்பின் ஊடாக தன்னைத் தொடர்பு கொள்ளும்படி கேட்டிருந்தாள்.

மனைவியின் வேண்டு கோளின்படி உடனடியாக புறப்பட ஆயத்தமான கேதீஸ் தனது இரவுணவைத் தருமாறு மனைவியின் தங்கையிடம் வேண்டிக்கொண்டார். அத்துடன் ஒரு கோப்பை வெறுந்தேனீரையும் தருமாறு கேட்டுக் கொண்டே தனது புதிய துடுப்பைத் துடைத்துக்கொண்டு மனைவியின் வீட்டின் உணவறை வாசலில் முதுகைப் பின்புறமாகக் காட்டிக் கொண்டு மிகுந்த சிந்தனையுடன் இருந்துள்ளார்.

இவற்றிற்கு சில மணித்தியாலங்களின் முன் அவரது மனைவியின் தம்பி அன்று கொழும்பிற்குப் பயணமாயிருந்தான்.

எப்போதுமே பேரூந்தில் பயணிப்பதையே வழக்கமாகக் கொண்டிருந்த அவன் அன்று தொடரூந்தில் பயணித்தது இக் கொலைக்கான முக்கிய சாட்சி யொன்றை உருவாக்கிவிட்டது.

மாலை 7.30 மணிக்கு திருகோணமலையிலிருந்து புறப்படும் தொடரூந்திற்குச் செல்வதற்காக தயாரான அவனை தொடரூந்து நிலையத்தில் கொண்டு சென்று இறக்கி விடுவதற்காக அவனது நண்பன் ஐயனார் கேணியிலுள்ள வீட்டிற்கு வருகை தந்திருந்தான். உந்துருளி-யொன்றில் அவர்கள் இருவரும்



தொடரூந்து நிலையம் நோக்கிப் பயணித்திருந்தனர். கேதீஸின் மனைவியின் தம்பியை தொடரூந்து நிலையத்தில் இறக்கிவிட்டு தலைக் கவசத்தை திரும்பவும் அவர்களது வீட்டில் கொடுப்பதற்காகத் திரும்பி வந்த அந்த நண்பனுக்கு ஆச்சரியம் ஒன்று காத்திருந்தது.

கேதீஸின் மனைவியின் வீட்டிற்குச் செல்ல வேண்டுமானால் ஐயனார்கேணியின் பிரதான வீதியின் ஊடாக வந்து முதலாவது பிரதான வாயிலில் உள்ள படலையைத் திறந்து அதன் பின்னர் பெரிய முற்றம் ஒன்றின் ஊடாகச் சென்று மீண்டும் ஒரு சிறிய படலையைத் திறந்து ஒரு உந்துருளி செல்லக்கூடிய அளவுள்ள பாதையின் ஊடாகவே சிறிது தூரம் செல்ல வேண்டும். ஐயனார் கேணியின் பிரதான பாதை வரை மட்டுமே வெளிச்சமிருப்பது அந்தத் தெருவின் சிறப்பம்சமும் கூட.

அதாவது பிரதான படலையிலிருந்து தெரு எப்போதுமே இருள் சூழ்ந்துதான் இருக்கும். அந்தப் பிரதான படலை இரண்டு வகையாகப் பூட்டக்கூடிய அமைப்பைக் கொண்டது. பிரதான படலையின் மேலாக பூட்டக்கூடிய கொழுக்கி ஒன்றும் மற்றையது உட்புறமாக இழுத்துக் கொழுவும் கொண்டி ஒன்றுமாகும்.

அன்றும் இருள் சூழ்ந்திருந்த அந்தப் பிரதான படலையின் அருகில் தனது உந்துருளியில் வந்த அந்த நண்பனுக்கு ஆச்சரியம் ஒன்று காத்திருந்தது. பிரதான படலையின் மேல் கொழுக்கியை நீக்கி உந்துரு-ளியால் படலையைத் தள்ளித் திறக்க முற்பட்ட போது அப் படலை உட்புறக் கொண்டியால் பூட்டப் பட்டிருந்தது. அதனால் ஆச்சரிய மடைந்த அந்த நண்பன் உந்துருளியின் வெளிச்சத்தைப் பிரதான ஆளிக்கு மாற்றிவிட்டு (Head light) உட்பக்கக் கொண்டியைத் திறக்க முற்பட்டபோது........

திடீரென உள்ளிருந்து ஒரு கட்டையான உருவம் கொண்டியைத் நீக்கிப் பிரதான படலையைத் திறந்தவாறு மிக வேகமாக அவ்விடத்தை விட்டு நகர்ந்தது. அந்த உருவம் தெளிவாக அந்த நண்பனின் பார்வையில் பட்டு நினைவுக்குள் பதிவாகி விட்டது. முன் எப்போதும் கண்டிராத வித்தியாசமான ஒருவன் என்பதுடன் அதிர்ச்சியும் ஆச்சரியமும் கலந்த வேளை அவன் படலையைத் திறந்து வெளியேற எத்தனித்த அவசரம் ஆகியன எல்லாமே சேர்ந்து தெளிவற அந்தப் புதியவனின் விம்பத்தை அந்த நண்பனின் ஞாபகக் குறிப்புக்களில் வரைந்திருந்தது.

அந்த நண்பன் கேதீஸின் மனைவியின் வீட்டை அடைந்து உந்துருளியின் ஒலியை எழுப்பிய போது அவ் வீட்டின் பின்புறத்திலிருந்து கேதீஸின் உருவம் சட்டென வெளியே வந்தது.

கேதீஸ் எப்போதுமே அந்த நண்பனுடன் கேலிப் பேச்சில் ஈடுபடுவது வழக்கம். அன்றும் அந்த நண்பனைக் கண்டவுடன் தனது வழமையான கேலிப் பேச்சுக்களை அந்த இளையவன் மீது தெளித்தான்.

அவர்களின் கேலிப் பேச்சினால் அந்த நண்பன் சொல்ல வந்த முக்கியமான விடயத்தை சொல்ல மறந்து விட்டான். சொல்லியிருந்தால் அன்று அந்தக் கொலை நிகழாது போயிருக்கலாம்.

(தொடரும்)

மலைமுரசு பத்திரிகையின் உத்தியோகபூர்வ வினியோகத்தர்கள் - திருமலை நகர லியோ கழகத்தினர்
The official distributor of Malaimurasu is Leo club of Trincomalee Town

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை, ஸ்ரீராம் பிரதர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் 25.05.2013 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.